www.padippakam.com

ம.தி.மு.க. கூட்டு சி.பி.எம்-ன் சந்தர்ப்பவாதம்

15 ஏப். '95 ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்




## ஜெயாவின் தேர்தல் சதிராட்டம்

படிப்பகம்

www.padippakam.com

## வி.வி.மு., பு.மா.இ.மு., ம.க.இ.க. நடத்தும் சீர்காழி மே - 1 இறால் பண்ணை அழிப்புப் போராட்டம்

# பண்ணைகளை விரட்டும் பறைமுழக்கம்

இந்தியாவை மறுகாலனியாக்கத் துணிந்துவிட்ட நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசு கும்பல் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம் ஆகியவைகளின் கட்டளைக்கு அடிபணிந்து அந்நிய முதலாளிகளின் நலனுக்காக இறால் பண்ணைகள் அமைக்க அனுமதித்து வருகிறது. சொந்த நாட்டு மக்களின் உணவுத் தேவைகளை ஒழித்து அந்நிய நாட்டினரின் ருசியான உணவிற்காக இறால் வளர்த்து ஏற்றுமதி செய்யப் போகிறார்கள். தமிழகத்தின் விளைநிலங்களைப் பாழாக்கி வங்கக் கடலோரம் 7500 ஹெக்டேர் பரப்பளவில் நூற்றுக் கணக்கான இறால் பண்ணைகள் தொடங்கியும் / தொடங்கப்பட்டும் வருகின்றன. இவற்றிற்கு அனுமதி வழங்கி, கூட்டுக் கொள்ளையடித்து வரும் ராவ் - ஜெயா கும்பலையும் இவர்களின் அந்நிய எஜமானர்களையும் எதிர்த்து நின்றால்தான் விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு வாழ்வு என்ற நிலை தோன்றிவிட்டது.

**விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, மக்கள் கலை இலக்கியக் கழகம்** ஆகிய அமைப்புகள் இணைந்து மே 1-ந்தேதி சீர்காழியில் இறால் பண்ணை அழிப்புப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்து, விவசாயிகளையும் மீனவர்களையும் அணிதிரட்டி வருகின்றன. சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை, காரைக்கால், தரங்கம்பாடி, பொறையார் முதலான பல பகுதிகளின் சுற்றுவட்டார உட்கிராமங்களில் நூற்றுக்கணக்கான இடங்களில் சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்துள்ளனர். கலைக்குழுவினர் எழுச்சிமிகு பாடல்களுடன் தெருமுனைகளில் நிகழ்ச்சி நடத்திச் செய்யும் பிரச்சாரம் மக்களிடையே போராட்ட உணர்வைப் பெருக்கியுள்ளது. ''உங்கள் பறைமுழக்கமே பண்ணைகளை விரட்டிவிடும்'' என்று பாராட்டினார் ஒரு விவசாயி. இதுவல்லாமல் தஞ்சை, கும்பகோணம், நாகை, திருச்சி, மதுரை, சென்னை, கோவை என தமிழகமெங்கும் இவ்வமைப்பினர் செய்யும் பிரச்சாரம் மக்களைக் கவர்ந்துள்ளது. 13-3-95 முதல் பொதுக்கூட்டங்களை அன்றாடம் நடத்தி வருகின்றனர். பெருவளப்பூர், சேந்தமங்கலம், சீர்காழி, மற்றும் அதன் சுற்று கிராமங்கள், சங்கராபுரம், இராசபாளையம், மதுரை, விழுப்புரம் அருகே பனையபுரம், காரப்பட்டு, தஞ்சை ஆகிய இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடந்துள்ளன.

இவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மே நாளில் சிறீரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம் அறிவித்து, பின் நுழைந்து காட்டியவர்கள் என்பதால் இறால் பண்ணை அழிப்புப் போராட்ட அறிவிப்பு எதிரிகளை அச்சமூட்டியுள்ளது. சிதம்பரம் கள்ளக்கடத்தல் வாண்டையார், தேச விரோதி மணி சங்கரய்யர், பிற பண்ணை முதலாளிகள் இணைந்து ''இறால் பண்ணை வளர்ச்சி மற்றும் பாதுகாப்புப் பேரவையை'' ஏற்படுத்தியுள்ளனர். கருவறை நுழைவுப் போராட்டத்தின் போது ''மண்டையைப் பிளப்போம்'' என்று இந்து முன்னணியைச் சேர்ந்த பார்ப்பன காலிகள் ஓலமிட்டதைப்போல இறால் முதலாளிகள் கும்பலும் ''இறால் பண்ணை செழிப்புப் போராட்டப் பேரணி'' என்று அறிவித்துள்ளது. அழிப்புப் போராட்ட சுவரெழுத்துக்கு அருகிலேயே செழிப்புப் போராட்டம் என எழுதியுள்ளதோடு, சீர்காழி நகராட்சி ஊழியர்கள் மூலம் அரசு சுவர்களில் எழுதப்பட்ட அழிப்புப் போராட்ட சுவரெழுத்துக்களை அழித்தும் உள்ளனர். நகராட்சி ஆணையரை வி.வி.முன்னணியினரும் பகுதி மக்களும் சென்று நியாயம் கேட்டு எச்சரித்தனர். அதிகார வர்க்கம் முதலில் மிரட்டல் என்று வந்து பின் போராட்டத்திற்குரிய வரவேற்பைக் கண்டு கலங்கிப் பணிவாக நடந்து கொண்டது.



பேருந்து பிரச்சார வசூலின்போது நாகையில் ஒரு காங்கிரசுக்காரன் எதிர்த்து வம்புக்கு வந்து பல்லுடைபட்டுச் சென்றான். கும்பகோணம் பகுதியில் ''போராட்டத்தைக் கைவிட்டால் 2 லட்சம் லஞ்சம் தருகிறோம்'' என்று பேரம் பேசிய ஒரு பண்ணை முதலாளியின் நண்பனுக்குத் தக்க பதிலடி கிடைத்தது. சிதம்பரம் பேருந்து நிலையத்தில் அ.தி.மு.க. ரவுடிகள் தோழர்களைத் தாக்கி பிரச்சாரம் செய்யக் கூடாது என மிரட்டியதை மீறிப் பிரச்சாரம் செய்து மூக்குடைத்தனர். மயிலாடுதுறையில் மணிசங்கரய்யருக்குப் பதிலாக போலீசு வந்து தடுத்தது. ''பிக்பாக்கெட்காரர்கள்'' தொல்லை பேருந்து நிலையத்தில் உள்ளதாகவும் அவர்களை உங்களால் பிடிக்க இயலாமல் உள்ளதாகவும் சாக்குகூறி தடுத்து மிரட்டிய போலீசுக்குத் தக்க பதில் கொடுக்கப்பட்டது. தஞ்சையில் பேருந்து வசூல் செய்த பாபு, கிறிஸ்டி ஆகிய தோழர்களை தி.க.வைச் சேர்ந்த வல்லம் கல்லூரி மாணவர்கள் வம்பிழுத்துத் தடுத்து அடாவடித்தனம் செய்தனர். தக்க பதில் கொடுத்துவிட்டு வசூல் தொடரப்பட்டது.

இறால் பண்ணை அழிப்புப் போராட்டத்தை காங்கிரசு, அ.தி.மு.க. கட்சித் தலைமைகள் எதிர்க்கின்றன; தி.மு.க., ம.தி.மு.க., சி.பி.ஐ. கட்சித் தலைமைகள் மௌனம் சாதிக்கின்றன. ஆனால் சீர்காழியிலும் சுற்றுவட்டார கிராமங்களிலும் அ.தி.மு.க. உட்பட அனைத்துக் கட்சியைச் சேர்ந்த உள்ளூர் தலைவர்களும் அணிகளும் கட்சிக் கட்டுப்படுத்தலையும் மீறி ஆதரிக்கின்றனர். இது ஊர்ப் பிரச்சினை, விவசாயி - மீனவர்களின் வாழ்வுப் பிரச்சினை என்ற முறையில் அணிதிரள்கிறார்கள்.

''1860-ல் அவுரி விவசாயிகள் போராட்டம் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்தது போல 1995-ல் அமெரிக்க மேல்நிலை வல்லரசுக்கு எதிராக இறால் பண்ணை அழிப்புப் போர் நடத்துவோம்'' என மேற்படி அமைப்பினர் மக்களை அறைகூவி அழைத்துள்ளனர். பெருந்தோட்டம், புதுத்துறை பகுதிகளில் இறால் பண்ணைக்கு எதிராக மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு பண்ணையமைக்க வந்தவர்களைத் தாக்கி விரட்டியுள்ளனர். பல பகுதிகளில் பண்ணையைத் தாக்க தலைமை கொடுங்கள் என இப்போழுதே முன் வருகின்றனர். எனவே, மக்களின் உணர்வெழுச்சிக்கு முன் எதிரிகள் மண்டியிடுவது உறுதி. மே-1 போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும்.

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

பத்தாம் ஆண்டு

9 - 10

16 மார்ச் - 15 ஏப். '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.00
ஆண்டு சந்தா: ரூ. 72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.

''ஜெ'' தேர்தல் உத்தி:

# மக்களுக்கு இலவசங்கள், ஜெ.ஜெ. டி.வி! எதிர்க்கட்சிகளுக்கு பாசிச ஒடுக்குமுறை!

சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே இருக்கும் இந்த வேளையில், அதைச் சந்திப்பதற்கான தேர்தல் உத்தியை வகுத்துக் கொண்டு இப்போதே களத்தில் இறங்கிவிட்டது ஜெயலலிதாவின் கட்சி. சட்டமன்ற அமைப்பின் கீழ் இவ்வளவு கேடு கெட்ட, இத்தனைக் கொடூரமான ஆட்சி வேறெதுவும் இருக்க முடியாது என்று சரித்திரம் படைக்கிறது, பார்ப்பன - பாசிச ஜெயலலிதா ஆட்சி. மிருக பலமிக்க சட்டமன்றப் பெரும்பான்மையும், பாசிச குண்டர் படையும் கொண்டுள்ள தைரியத்தில் எதிர்க்கட்சிகளின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து அதிகார போதையில் அராஜக வெறியாட்டம் போட்டு வருகிறது.

அண்மையில், ''தடா'' சட்டத்தை ரத்து செய்யக் கோரி, பா.ம.க.வினர் நடத்திய ஊர்வலத்துக்குத் தடை விதித்த ஜெயா கும்பல், போலீசை ஏவி காட்டுமிராண்டித் தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டு முன்னணித் தலைவர்களின் மண்டையை உடைத்தது. போராட்டம் என்று இறங்கினால் இதுதான் பதிலடி என்று எதிர்க்கட்சிகளுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என்ற நோக்கத்திலேயே, பா.ம.க. மீது இத்தகைய கொலைவெறித் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துக்கு ஒரு வாரம் முன்பாக, காரைக்குடியில் நடந்த தி.மு.க. பொதுக்கூட்டத்தில் பேசிய ஸ்டாலின் மீது அழுகிய முட்டை, செருப்புகளை வீசி அ.தி.மு.க. குண்டர்கள் அராஜகம் செய்தனர். பிறகு போடியில் நாஞ்சில் மனோகரன் பேசிய பொதுக் கூட்டத்தில், தொகுதி எம்.எல்.ஏ. பன்னீர் செல்வம் தலைமையில் அ.தி.மு.க. குண்டர்கள் மேடையை நாசப்படுத்தி, தி.மு.க.வினரைத் தாக்கி வெறியாட்டம் போட்டனர். பிறகு தாக்கப்பட்டவர்களே கைது செய்து வழக்குப் போடப்பட்டனர். இந்த அராஜகத் தாக்குதல்களை பாசிச ஜெயா, சட்டமன்றத்திலேயே நியாயப்படுத்தினார். இதுபற்றி பேசமுற்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உரிமை மறுத்து அவையைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.

இதுதவிர, ''நான் மட்டுமே பேசுவேன்'' என்று சட்டசபையில் ஜெயா கொக்கரிப்பதைப் போலவே, தனது ஜெ.ஜெ. டி.வியைத் தவிர மற்ற தனியார் டி.வி.க்களைச் செயல்பட விடாமல் தடுக்கக் கிளம்பியுள்ளது. சன் டி.வி., ராஜ் டி.வி., ஜெயின் டி.வி. முதலானவற்றின் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்யும் கேபிள் டி.வி. நிறுவனங்களை உருட்டி மிரட்டியும், பட்ஜெட்டில் கேளிக்கை வரிக்குறைப்பு செய்து ஆசை காட்டியும், சூப்பர் - டூப்பர் என்ற தனது பினாமி நிறுவனத்தின் கீழ் அனைத்து கேபிள் டி.வி. ஒளிபரப்பாளர்களையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள கேடாக முயற்சிக்கிறது. ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் அது உண்மையாகிவிடும் என்ற கோயபல்சு உத்தியுடன், தனது கட்சி மட்டுமே தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கான பாசிச ஏற்பாடுதான் இது.

இத்தனையும் போதாதென்று, இலவச - கவர்ச்சித் திட்டங்கள் மூலம் தனக்கு முற்றிலும் விசுவாசமான ஒட்டுண்ணி - உதிர்க் கும்பலாக ஒரு பிரிவு மக்களைத் திரட்டிக் கொண்டுள்ளது. கோடி கோடியாகக் கொள்ளையடித்த பணத்திலிருந்து சில எலும்புத் துண்டுகளை வீசியெறிந்து பிறந்த நாள் விழா, உணவு, வேட்டி - சேலை என்று இலவச வெள்ளத்தில் மூழ்கடிப்பது, இத்தனை ஒட்டுண்ணிகளைத் திரட்டி வந்து ஊர்வலம், மாநாடு நடத்தி பிரமிப்பூட்டுவது, வாக்காளர்களுக்கு மோதிரம், மூக்குத்தி, வேட்டி - சேலை, ஒரு ஓட்டுக்கு ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் என்று விலை கொடுத்தும், அடியாட்களை அமர்த்தியும், ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ரூ. 20 கோடி வரை செலவிட்டும் தேர்தல் வெற்றியைச் சாதிப்பது என்ற நோக்கதுடனேயே செயல்படுகிறது. இதோடு இதுவரை ரேசன் அரிசி விலை ஏற்றப் பல முறை முயன்ற அரசு இப்போது விரிபில்லாத, அடுக்கடுக்காய் இலவச - கவர்ச்சித் திட்டங்களை அள்ளி வீசும் பட்ஜெட்டையும் தேர்தலைக் குறி வைத்து அறிவித்துள்ளது. பூரண மதுவிலக்கையும் மத்திய அரசு நிதியுதவி செய்தால் அமுல்படுத்துவதாக அறிவித்துள்ளது.

இவற்றைவிட முக்கியமானது, ஜெயாவின் கட்சியும் ஆட்சியும் வெறும் பிழைப்புவாத - கவர்ச்சிவாதத் தன்மையுடையதல்ல; சரத்பவாரைப் போன்ற பணபலமும், தேவிலால் - சௌதாலாவைப் போன்ற தேர்தல் ரௌடித்தனமும், நரசிம்மராவ் - அத்வானியைப் போன்ற பார்ப்பன பாசிச வெறியும், பீகார் பாணியில் கிரிமினல் குண்டர் படையும் கொண்டது. எனவே ஜெயாவை அமைதியான தேர்தல் அரசியலால் ஒரு போதும் வீழ்த்திடவும் முடியாது. எதிர்க்கட்சிகளின் கையாலாகாத்தனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு மேலும் மூர்க்கமாகப் பாய்கிறது பாசிச ஜெயா கும்பல். எனவே, என்னவானாலும் எங்களை ஆட்டவோ, அசைக்கவோ முடியாது என்று கொட்டமடிக்கும் பாசிச ஜெயா கும்பலை உழைக்கும் மக்கள் தங்கள் பகுதியில் இயங்கவிடாமல் சமூகக் கட்டுப்பாடுகள் விதித்து தண்டிக்க வேண்டும்; கட்சிக் குண்டர்கள் மீது எதிர்த்தாக்குதல் தொடுத்தும் முற்றுகையிட்டும் விரட்டியடிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# குட்டிப் பொதுத் தேர்தல் முடிவுகள்: அனைத்துக் கட்சிகளும் நிராகரிப்பு

ஆறு பெரிய, நடுத்தர மாநிலங்கள் மற்றும் மூன்று சிறு மாநிலங்களின் சட்டப் பேரவைகளுக்கான ஒரு குட்டிப் பொதுத் தேர்தலே நடந்து முடிந்துவிட்டது. அடுத்த ஓராண்டில் வர விருக்கும் பதினோராவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல்களுக்கு ஒரு முன்னோட்டமாகவே இது கருதப்படுகிறது.

கருத்துக் கணிப்பு அறிவியலின் சூரப்புலிகள் என்று சொல்லப்பட்டவர்கள் பலரது மதிப்பீடுகள் எல்லாம் பொய்த்துப் போய்விட்டன. தேர்தல் முடிவுகளை வைத்துச் சூதாடுவது கூட பல கோடி ரூபாய்களை எட்டிவிட்டது. ஆனால் அதிலேயே கில்லாடிகளான சூதாடிகள் கூட இந்தக் குட்டிப் பொதுத் தேர்தலின் முடிவுகள் கண்டு ஏமாந்து விட்டார்கள். கடைசி நிமிடம் வரை யாருக்கு வாக்களிப்பது என்று முடிவு செய்யாதவர்களாக நிறையப் பேர் இருந்ததுதான் காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அதாவது தேர்தல் சமயத்தில் ஆட்சியில் இருந்த கட்சிகளைத் தோற்கடிப்பது என்பதில் வாக்காளார்கள் தீர்மானகரமாக இருந்தார்கள்.

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் காங்கிரசுக் கட்சிக்கு (சந்தேகத்துக்கு இடமின்றி) பேரிழப்பை, பேரிடியை தந்திருக்கின்றன. ஆனால் பாசிச சகுனி நரசிம்மராவின் தலைமையிலான காங்கிரசுக் கட்சி கல்லுளி மங்கனைப்போல் வாய் மூடிக்கிடக்கிறது. தலைமைத் தேர்தல் ஆணையாளர் சேஷனுடைய தயவால்; இந்தத் தேர்தல் ஆறுமாத இடைவெளியில் தள்ளித் தள்ளி வைக்கப்பட்டு நடப்பதால், தோல்வியின் தாக்குதல்கள் வெளித் தெரியாமல் காங்கிரசுக் கட்சி நடிக்கிறது.

பீகார் தேர்தல்களின் இறுதி முடிவு வந்தபிறகு காங்கிரசு செயற்குழு கூடி தேர்தல் முடிவுகளைப் பரிசீலித்துத் தனது கருத்தைத் தெரிவிப்பதாகச் சமாதானம் கூறுகிறது. ஆனால் காங்கிரசாரின் முகத்தில் சவக்கலை தெரிகிறது. இருந்தாலும் சவடால் நீடிக்கவே செய்கிறது.

முதல் தவணையாக ஆந்திரா, கர்நாடகா தேர்தல்கள் நடந்தன. அங்கு தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்த பிரதமர் ராவ் வெறிச்சோடிக் கிடந்த மைதானத்தைப் பார்த்து பேசினார், ''நடக்கும் தேர்தல்கள் எனது தாராளமயமாக்கல் கொள்கையின் மீதான மக்கள் தீர்ப்பாகக் கருதுவேன். அந்தக் கொள்கை நீடிக்க வேண்டுமானால், அதன் பயன் மக்களை அடைய வேண்டுமானால் மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சி அதாவது காங்கிரசு ஆட்சி நீடிக்க வேண்டும்; காங்கிரசுக்கு வேறு மாற்றுக் கட்சி கிடையாது'' என்று அடித்துச் சொல்லி ஓட்டுக் கேட்டார். அடுத்து மராட்டிய, குஜராத், ஒரிசா, பீகார் தேர்தல் பிரச்சாரத்தின் போதும் இதே கருத்தோடு, ''அயோத்தியில் மசூதியும் கோவிலும் கட்டப்படும்'' என்று வாக்குறுதியும் அளித்தார். ஆந்திராவிலும் கர்நாடகாவிலும் எதிர்க் கட்சிகளின் 'இலவச - கவர்ச்சி'த் திட்டங்களை எள்ளி நகையாடினார்; ஆனால் அவ்விரு மாநிலத் தேர்தல்களிலும் மண்ணைக் கவ்வியதால், பிற மாநிலத் தேர்தல்களின் போது காங்கிரசும் பல 'இலவச - கவர்ச்சி'த் திட்டங்களை அறிவித்தது.

இருந்தாலும் காங்கிரசின் புதிய பொருளாதாரத் தாளாரமயக் கொள்கைகளையோ, 'இலவச - கவர்ச்சி'த் திட்டமாய்மாலாங்களையோ வாக்காளர்கள் நம்பிடவில்லை. ஆந்திராவின் அங்கீகாரம் பெற்ற எதிர்க் கட்சிக்குரிய தகுதி கூட கிடைக்காதவாறு படுதோல்வியை காங்கிரசு அடைந்தது. கர்நாடகாவில் இரண்டாவது கட்சிக்குரிய தகுதியைக்கூட அடைய முடியவில்லை. பாரதீய ஜனதா கட்சியே முதன்மையான எதிர்க்கட்சியானது. ஆனாலும் குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கோமாளித்தனமாக நாடகமாடியது, காங்கிரசு.

> இது ஓட்டுக் கட்சிகளுக்கும் தேர்தல் அரசியலுக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடி மட்டுமல்ல இவையும் சேர்ந்த நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கே ஏற்பட்டுள்ள நெருக்கடிதான்

அதேசமயம் ''கர்நாடகா, ஆந்திர தேர்தல் முடிவுகள் அந்தந்த மாநில ஆட்சிகளுக்கு எதிரானவைதான்; மத்திய அரசுக்கோ, நரசிம்மராவ் தலைமைக்கோ, புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கோ எதிரானவை அல்ல'' என்று தாமாகவே ஒரு விளக்கம் கொடுத்தனர். ஆனால் அந்த முடிவுகளின் காரணமாக காங்கிரசுக்குள் பதவிச் சண்டை பகிரங்கமாக வெடிப்பதைத் தடுக்க முடியவில்லை. நரசிம்மராவ் ஆட்சியில் ஊழல், ராஜீவ் கொலை வழக்கு விசாரணை மந்தம், சிறுபான்மையினருக்கு எதிரான போக்கு, புதிய பொருளாதாரக் கொள்கையின் மக்கள் விரோதத் தன்மை ஆகிய பிரச்சினைகளை எழுப்பி அர்ஜூன்சிங் கட்சிக்குள் ''கலகம்'' செய்தார். அவரை வெளியேற்றுவதில் ராவ் கும்பல் வெற்றி பெற்றாலும் கட்சிக்குள் அர்ஜூன்சிங்குக்கு கணிசமான செல்வாக்கு நீடிக்கிறது; கல்பனாத் ராய் போன்றவர்கள் கூட ராவுக்கு அடிப்பணிய மறுத்தனர்.

இருந்தபோதும், முந்தைய அதே ஆணவத்தோடு அடுத்த கட்டத் தேர்தலை காங்கிரசு சந்தித்தது. இதில் தரகு முதலாளிகளின் கோட்டைகளான மராட்டியத்திலும், குஜராத்திலும் காங்கிரசு தோல்வியையே கண்டது. பணம் கொழிக்கும் இம்மாநில ஆட்சிகளை இழந்தபோதும் வறண்டு போன ஒரிசாவில் ஆட்சியைப் பிடித்தது. அங்கு ஆளுங்கட்சியான ஜனதா முதல்வர் பிஜூ ஒரு காங்கிரசுக்காரரைப் போலவே ஆண்டு வந்தார். ஆனால் ஆளுங்கட்சியைத் தோற்கடிப்பது என்ற வாக்காளர்களின் முடிவின் காரணமாக, வேறு மாற்றுக் கட்சி இல்லாத நிலையில் காங்கிரசு பதவிக்கு வந்தது.

காங்கிரசு தலைமையோ ஒரிசா வெற்றியைப் பெரிது படுத்தியதோடு, மராட்டியத்தில் தனிப்பெரும் கட்சியாக வந்துவிட்டோம் என்று கூறிச் சமாளிக்க முயன்றது. குஜராத்தில் முந்தைய தேர்தலைவிடக் கூடுதலாகப் பெற்றுள்ளோம் என்று கூறி அரசியல் பித்தலாட்டம் செய்தது. அதாவது கடந்த தேர்தலில், குஜராத்தில் பாரதீய ஜனதா ஆதரவுடன் ஜனதா தளம் ஆட்சி அமைத்தது; பாரதீய ஜனதா ஆதரவை விலக்கிக் கொண்ட பிறகு, ஜனதா தளத்தினர் கூண்டோடு கட்சி மாறி காங்கிரசு அமைச்சரவை கண்டனர்; இதுவரை ஆட்சியில் இருந்த காங்கிரசு இந்தத் தேர்தலில் படுதோல்வி கண்டுள்ளது. இடையில் நடந்த இந்த நிகழ்ச்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு கடந்த தேர்தலைவிடக் கூடுதல் இடம்பெற்றதாக இப்போது சவடால் அடிக்கிறது. பீகாரில் ஆட்சியைப் பிடிக்காவிட்டாலும் இதே காரணத்தைக் கூறி சமாளிப்பதற்கு வசதியாகிவிட்டது. அருணாச்சலப் பிரதேசத்தில் மாநில அரசியல் தலைவர் அபாங்கின் செல்வாக்கைப் பயன்படுத்தி பெரும்பான்மை பெற்றது. கோவா, மணிப்பூரில் சுயேட்சை எம்.எல்.ஏ.க்களை விலை பேசி ஆட்சியைப் பிடித்தது. மராட்டியத்

www.padippakam.com

திலும் அதற்காக முயற்சித்துப் பார்த்தது; ஆனால் அங்கே சரத்பவாரின் ஆட்சி ஏற்படுவதில் நரசிம்மராவ் கும்பலுக்கு உடன்பாடு இல்லாததால் அதை ஏற்கவில்லை.

எப்படியோ, மத்தியில் ஆட்சியில் இருந்தபோதும் காங்கிரசு பெரும்பான்மையான மாநிலங்களின் ஆட்சி அதிகாரத்தை இழந்துவிட்டது. மத்தியப் பிரதேசம்தான் அது ஆளும் பெரிய மாநிலம்; மற்றவை நடுத்தர, மற்றும் சிறிய மாநிலங்கள். நாட்டின் பெரும்பாலான வாக்காளர்கள் அதை நிராகரித்துவிட்டார்கள். இசுலாமியர், தலித்கள், பெண்கள் ஆகிய சிறுபான்மையினரின் ''காவலன் காங்கிரசு'' என்கிற மாய்மாலத்தையோ, புதிய பொருளாதாரக் கொள்கைகள் மேட்டுக்குடியினர் என்கிற சல்லடையின் வழியாகக் கசிந்து ஏழைபாளைகளை அடையும் என்கிற பித்தலாட்டத்தையே மக்கள் நம்பவில்லை. எனவே, இந்தக் குட்டிப் பொது தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்கு சாவுமணியாக அமைந்துவிட்டது.

இந்தக் குட்டிப் பொதுதேர்தல் முடிவுகள் தனக்கு மாபெரும் வெற்றி என்று ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா - சிவசேனா ஆகிய இந்து பாசிச பரிவாரங்கள் கொண்டாடுகின்றன. குஜராத்தில் பாரதீய ஜனதாவும், மராட்டியத்தில் பா.ஜ.க. - சிவசேனா கூட்டணியும் ஆட்சியைப் பிடித்துள்ளன. கர்நாடகாவில் ஆட்சியைப் பிடித்துவிடுவோம் என்று நம்பிக் கொண்டிருந்த பா.ஜ.க. பிரதான எதிர்க்கட்சித் தகுதியை எட்டியுள்ளது. சிவசேனா முதன்முறையாக அதிகாரத்தை சுவைக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

மொத்தத்தில் இந்தத் தேர்தல்களால் இந்து பாசிச பரிவாரங்களின் செல்வாக்கு பெருகி வருவதாகவே தெரிகிறது. அதற்குக் காரணம், அயோத்தி மசூதி இடிப்புக்குப் பிறகு, ம.பி., உ.பி., இ.பி. மாநிலங்களில் நடந்த தேர்தல்களின் ஆட்சியை இழந்ததால், அவர்கள் உத்திகளை மாற்றிக் கொண்டுள்ளனர். இராமன் கோவில் - இந்துத்துவம் போன்ற பிரச்சினைகளை விசுவ இந்து பரிசத், ஆர்.எஸ்.எஸ். போன்ற நேரடி மதவெறி அமைப்புகளும், ''இலவச - கவர்ச்சிவாத'' அரசியலை பா.ஜ.க.வும் முன்னிறுத்தி வேலை செய்வது என்று பிரித்துக் கொண்டு நாடகமாடுகின்றனர். இதோடு, அடிப்படையில் இந்துமத வெறி பாசிசத்தின் இன்னொரு பிரதிநிதியான சதிகார சகுனி நரசிம்ம ராவ் கும்பல் மதச்சார்பற்ற ஜனநாயகவாதியாக நடிப்பதை முஸ்லீம்கள் புரிந்து கொண்டு நிராகரித்துவிட்டனர். அவர்களுடைய வாக்குகள் எதிர்க்கட்சிகளிடையே பிரிந்து போய்விட்டதை பா.ஜ.க., சிவசேனா கட்சிகள் பயன்படுத்திக் கொண்டன.

காங்கிரசுக்கு மட்டுமல்ல, தேசிய முன்னணி - இடது சாரி கூட்டணிகளுக்கும் இந்தத் தேர்தல்கள் வெற்றியாக அமையவில்லை. ஆளும் கட்சியை வீழ்த்துவது என்ற வாக்காளர்களது கொள்கை காரணமாக ஆந்திராவில் தெலுங்கு தேசமும், கர்நாடகாவில் ஜனதா தளமும் ஆட்சியைப் பிடித்தன. ஆனால் பீகாரில் இழுபறி நிலைக்கும், ஒரிசாவில் ஆட்சி இழப்புக்கும், பிற மாநிலங்களில் மேலும் பரிதாபகர நிலைக்கும் அது தள்ளப்பட்டுள்ளது. ஜனதா தளத்தை அவ்வப்போது பிளந்து கொண்டு வெளியேறியவர்கள் காங்கிரசில் இணைந்து பதவிகள் பெற்றனர்;



அல்லது தனிக்கட்சி துவங்கி முகவரியில்லாமல் போயினர். உ.பி.க்கு வெளியே காலடி எடுத்து வைக்க முயன்ற முலாயம் சிங், கன்ஷிராம் கட்சிகள் அதில் தோற்றுப் போயின. இடதுசாரிக் கூட்டணி, தேசிய முன்னணியை நம்பியே ''தேசிய'' அரசியல் நடத்தி வந்தது. ஆனால் அதன் சிதைவும், ஜனதா தளத்துக்குள் பாதிப்பை ஏற்படுத்தியது. பாரதீய ஜனதா, காங்கிரசு அல்லாத சக்திகளுடன் ஐக்கிய முன்னணி கட்டுவது தனது இலட்சியமாகக் கூறிக் கொண்டாலும் நாற்காலி எண்ணிக்கையிலேயே குறிவைத்து சந்தர்ப்பவாதக் கூட்டுக்களை ஏற்படுத்தின அல்லது கூட்டணிகள்ளப் பிளந்து படுதோல்வி கண்டது.


ஆக, இந்தக் குட்டித் பொதுத் தேர்தல்களின் முடிவுகள், நாட்டின் தேர்தல் அரசியல் மீள முடியாத ஒரு நெருக்கடியை எட்டிவிட்டதையே குறிக்கின்றன. பல்வேறு சாதி, மத, இன, மொழி, பிராந்திய, வர்க்க நலன்களால் பிளவுப்பட்டுள்ள இந்தய சமுதாயத்தில் அனைவரது அல்லது பெரும்பான்மையினரது நம்பிக்கையை ஒன்று அல்லது இரண்டு கட்சி மட்டுமே பெற்று இனிமேலும் ஆட்சி நடத்த முடியாது. அனைத்துக் கட்சிகளும் அனைத்து மக்களுக்கும் பொதுவான ஏதாவது சில நலன்களைச் சொல்லி நம்பிக்கை பெறும் தகுதியை இழந்துவிட்டன. இனி இந்த நாட்டில் கூட்டணி ஆட்சி தான் சாத்தியம் என்று ''தேசிய''த் தலைவர்களே ஒப்புக் கொள்கின்றனர். இது நாட்டில் நாடாளுமன்ற அராஜகம் மீண்டும் தலைவிரித்தாடுவதற்குத் தான் வழி வகுக்கும். ''ஆயாராம் - காயாராம்'' கேலிக்கூத்துகளும், குதிரையேரல்களும் அன்றாட அரசியலாகி மேலும் நெருக்கடி முற்றும்.

இது ஓட்டுக் கட்சிகளுக்கும் தேர்தல் அரசியலுக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடி மட்டுமல்ல இவையும் சேர்ந்த நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கே ஏற்பட்டுள்ள நெருக்கடி தான். எனவேதான், இதுவரை இவையும் நாடாளுமன்ற ஜனநாயகம், அரசு அமைப்பு ஆகியன வேறுவேறானவை என்றும், முன்னிரண்டையும் கேலியும் கிண்டலும் செய்துவந்த சோ போன்ற ஆளும் வர்க்க சித்தாந்த வாதிகளும் கூட பதறி நிற்கின்றனர். ஏனெனில், இந்த நெருக்கடியின் நேர்விளைவு ஒன்றுதான். பாசிச ஆட்சிமுறையை நில்லநாட்டுவதுதான். அந்த நிலைமை ஏற்படும் போது, ஓட்டு மெத்த அரசு அமைப்பே மக்களிடமிருந்து தனிமைப்படுவதோடு, புரட்சி உடனடியான, தவிர்க்க முடியாததாகிவிடும்.

இதைத் தவிர்ப்பதற்கும் இப்போதைய அமைப்பு நீடிக்க முடியும், அதைக் காத்திட வேண்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேறு யாரையும் விட இடது சாரி கூட்டணி முயலுகிறது. நரகலில் நல்லரிசி தேடுவதைப் போல இருக்கும் ஓட்டுக் கட்சிக்குள், மாறிமாறிக் கூட்டணிகள் அமைகிறது. அல்லது ஆளும் கட்சிகளுடன் சமரசம் செய்து கொண்டு பித்தலாட்டங்களில் ஈடுபடுகிறத. இதற்கு மாறாக, தற்போதைய அரசியல் நெருக்கடியையும் அதுன் விளைவாக எழுந்துள்ள பாசிச அபாயத்தையும் அம்பலப்படுத்தி இந்த நாடாளுமன்ற ஜனநாயகம் நீடிக்க முடியாததையே பயன்படுத்தி, புரட்சிக்கு மக்களை அணிதிரட்டுவதே அவசியமாகும்.


படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## ஐ.நா. படை பரப்புவது அமைதியையா? எய்ட்ஸையா?

ஐ.நா. அமைதிப்படை, கம்போடியாவில் அமைதிப் பணியாற்றிய பொழுது, அந்நாட்டின் தலைநகரான நாம்பென்னில் மட்டும் விலைமாதர்களின் எண்ணிக்கை ஒரே வருடத்திற்குள் 6000-லிருந்து 20,000 ஆக அதிகரித்துள்ளது. "எய்ட்ஸ்" நோய்க் கிருமியான எச்.ஐ.வி. தாக்கியவர்களின் எண்ணிக்கையோ முன்பிருந்ததைவிட பத்து மடங்கு அதிகரித்திருக்கிறது. கன்னி கழியாத இளம் பெண்கள் - பெண் குழந்தைகளுக்கு 21,000 ரூபாய் வரை விலை பேசி சல்லாபித்து திரிந்திருக்கிறது அமெரிக்க இராணுவம். கேமர் ரூஜ் இயக்கம் இந்த ஈனச் செயலுக்காக, 'அமைதிப் படை'யின் தலைவர் நாட்டை விட்டு வெளியேறும் முன் அவர் முகத்தில் மனிதக் கழிவை எடுத்துப் பூசி அவமானப்படுத்துமாறு மக்களுக்கு அறைகூவல் விடுத்திருக்கிறது.

## புதிய பக்திமான்கள்

மலையாள மொழியில் வெளியாகும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அதிகாரபூர்வ நாளேடான தேசாபிமானி, அம்மாநிலத்திலுள்ள அட்டுக்கல் தேவி கோயில் திருவிழாவை யொட்டி தனி இணைப்பொன்றை வெளியிட்டது. "பொங்களா" எனப்படும் அத்திருவிழாவின் பக்திப் பெருமைகளைப் பற்றி விரிவாக விளக்கித் தனிக் கட்டுரையொன்றும் பிரசுரமாயுள்ளது. மேலும், பகவதி கோயில் திருவிழாக்கள் மற்றும் உள்ளூர் கிறிஸ்தவ - முஸ்லீம் மதப் பண்டிகைகள் குறித்தும் சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது, அந்நாளேடு. இது மாநில அளவில் விமர்சனங்களைக் கிளப்பி விடவே, அக்கட்சியின் சித்தாந்தவாதியான நம்பூதிரிபாடு, "நாத்திகம் மார்க்சியத்துக்கு முன் தேவையானது" எனக் கம்யூனிஸ்டுகள் ஆரம்ப காலங்களில் கருதி வந்தது தவறு எனப் புது விளக்கம் கொடுத்திருக்கிறார்.

## அர்ஜுன் சிங்கின் இரட்டை வேடம்

அர்ஜுன் சிங் சமீபத்தில் உ.பி. மாநிலத்தின் பாண்டா என்ற ஊரில் கல்லூரி ஒன்றைத் திறந்து வைத்தார். இதில் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால், இக்கல்லூரியின் நிர்வாகியான தாகூர் சந்தர்பால் சிங் பா.ஜ.க.வின் தீவிர அனுதாபி. கல்லூரியின் முதல்வர் ஜக்பீர் சிங் ஆர்.எஸ்.எஸ்.-ன் முன்னாள் உ.பி. மாநிலத் தலைவர். அர்ஜுன் சிங் ஊருக்குள் நுழைந்த பொழுது, 100 கார்கள் புடை சூழ அவருக்கு மாபெரும் வரவேற்பைத் தந்தவர் பா.ஜ.க.வின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாதுஷா சிங். இந்து மத வெறியர்களை எதிர்ப்பதாக மார்தட்டும் அர்ஜுன் சிங்கின் பச்சோந்தித்தனம் எப்படியிருக்கிறது?

## வெற்று காகிதத்தில் சமூக வளர்ச்சித் திட்டங்கள்

இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த நாடென்று கூறி வந்தாலும், நமது நாட்டில் மட்டும் 25 கோடிப் பேர் சத்தான உணவின்றி முன் கழுத்துக் கழலை, தொடு உணர்ச்சி அற்றுப் போதல், மூளை வளர்ச்சியின்மை, உடல் சூம்பி களைத்தல் போன்ற நோய்களுக்கு இரையாகியிருப்பதாக "யூனிசெப்" நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. சக்தியின்மையால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுள் 9 சதவீதம் மழலைகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது. வைட்டமின் 'ஏ' குறைவினால் மட்டும் ஆண்டுதோறும் இந்தியாவில் 90,000 குழந்தைகள் குறைப்பிரசவமாகவோ அல்லது பிறந்தவுடனேயோ இறந்துவிடுகின்றனர்; 60,000 குழந்தைகள் கண்பார்வையினை இழந்து போகிறார்கள் என ஆதாரங்களை வெளியிட்டுள்ளது அந்நிறுவனம்.

## பகல்பூர் தரும் எச்சரிக்கை

1989-ம் ஆண்டில் பீகார் மாநிலத்தில் பகல்பூர் பகுதியில் நடந்த மதக் கலவரங்கள் பற்றிய விசாரணை தீர்ப்புகள், பா.ஜ.க.வையும் அம்மாநில போலீசு அமைப்பையும் அப்படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் எனக் குற்றஞ்சாட்டியுள்ளன. கலவரம் நடந்த பொழுது காங்கிரசு ஆட்சி இருந்தும்கூட, எஸ்.பி., டி.ஐ.ஜி., மாவட்ட நீதிபதிகள் போன்ற உயர் அதிகாரிகள் இந்து மதவெறியர்களோடு கை கோர்த்துக் கொண்டு முஸ்லீம் மக்களை வேட்டையாடியுள்ளனர். இதோடு 90 சதவீத குற்றவாளிகள் குற்றஞ் சாட்டப்படாமல் தப்பிவிட்டதாகவும் அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் இந்து மத வெறியர்கள் வெற்றி பெற்றுள்ள சூழ்நிலையில் வந்துள்ள இத்தீர்ப்பு ஓர் எச்சரிக்கை சமிக்ஞையாகும்!

## குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை.

திரைப்பட அரங்குகள், துரித உணவு மற்றும் சூதாட்ட விடுதிகள் எனப் பலவகையான பொழுது போக்கு அம்சங்களை உள்ளடக்கிய ஐம்பதுக்கும் அதிகமான களிவெறியாட்ட அரங்குகளை நாடெங்கும் கட்ட ஏகாதிபத்திய நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்வரங்குகளைப் பம்பாயில் கட்ட சரத்பவார் ஒப்பந்தமிட்ட பொழுது, அதனை 'மார்க்சிஸ்டு'கள் "பம்பாயை அமெரிக்காவிலுள்ள லாஸ் வேகாஸ் போன்று சூதாட்ட நகராக மாற்றும் முயற்சி" என விமர்சித்தனர். இப்பொழுது இதுபோன்று அரங்குகளை கல்கத்தாவில் கட்ட 'வார்னர் பிரதர்ஸ்' நிறுவனத்திற்கு அனுமதியளித்துள்ளது ஜோதிபாசு அரசு. ஆனாலும், "சூதாட்ட விடுதிகளை நடத்தக்கூடாது என ஒப்பந்தத்தில் ஒரு வரி சேர்த்து விட்டோம்" என நியாயம் கற்பிக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# போராளிகள் கிரிமினல்களல்ல கைதிகள் விலங்குகளல்ல

புலிகள் தப்பிச் சென்றதை சாக்கு வைத்து கைதிகள் மீது கொலைவெறித் தாக்குதல் தொடுத்து ஜெயா கும்பல் பாசிச வெறியை தணிந்துக் கொள்கிறது.

விலை போகக் கூடிய அதிகாரிகள், காவலர்களைப் பயன்படுத்தியோ, சென்னை மத்திய சிறை நிர்வாகத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தியோ ''தடா''வில் கைதாகியுள்ள 9 விடுதலைப் புலிகள் தப்பித்தனர். இவர்களில் பெரும்பாலோர் சர்வதேச கடற்பரப்பில் சென்ற ''டாங்கனோவா'' மற்றும் கிட்டு தலைமையிலான கப்பல்கள் மீது இந்திய அரசு எடுத்த அத்துமீறிய தாக்குதலின் போது அநியாயமாக கைது செய்யப்பட்டவர்கள்.

தப்பித்தவர்களில் இருவரை உயிருடன் பிடித்ததாகவும் இருவரது உடலைப் பிணமாகக் கைப்பற்றியதாகவும் தமிழக போலீசு கூறுகிறது. சிறையருகே கூவத்தில் கண்டெடுக்கப்பட்ட பிணம் தப்பித்த விடுதலைப் புலிகளில் ஒருவரான சண்முகவேல்தானா என்ற சந்தேகமும் போலீசு தரப்பிலிருந்து எழுப்பப்பட்டது. உண்மையில் சிறைக் கொட்டடியில் அதிகாரிகள், காவலர்களால் அடித்துக் கொல்லப்பட்டு பின் வீசப்பட்ட ஒரு கைதியாகக் கூட இருக்கலாம்.

கைது செய்யப்பட்டவர்களிடம் ஏராளமாக பணம் இருந்ததாகவும், வெடிபொருட்கள், துப்பாக்கி, சயனைடு குப்பிகள் இருந்ததாகவும் சில நாட்கள் கழித்து சிறை மதிலுக்கு அருகே ஒரு வெடிகுண்டு கைப்பற்றப்பட்டதாகவும் போலீசு கூறியது. வெடிகுண்டு புரளி போலீசால் கிளப்பி விடப்பட்டது என்பது பின்னர் நிருபணமானது.

தப்பித்தவர்கள் புலிகளே அல்ல என்று காட்டுவது அல்லது மிகுந்த ஆபத்தான நெருக்கடிகளுக்கிடையில் கடினப்பட்டு செயல்படுவதாகக் காட்டுவது போலீசு மற்றும் அரசின் நோக்கமாக இருந்ததே மேற்கண்ட முரணான தகவல்கள், நடவடிக்கைகளுக்குக் காரணமாகும். தப்பித்தவர்களில் இருவரை பிடித்த போலீசுக்கு உடனடியாக பாராட்டி, பதவி உயர்வளித்து சிரமங்களுக்கு மத்தியில் சட்டம்-ஒழுங்கு பாதுகாக்கப்படுவதாக ஜெயா கும்பல் பீற்றிக் கொண்டதையும் கவனிக்கலாம்.

அப்பாவிகளை அநியாயமாகக் கைது செய்து சிறையில் அடைத்து சித்திரவதை செய்யும் போது அவர்களிடம் தப்பித்தல் உணர்வு எழுகிறதில் நியாயமிருக்கிறது. மேலும் ஆளும் வர்க்கத்திற்கு எதிரான கொள்கைக்காகப் போராடுகிற அரசியல் கைதிகள் - ராணுவக் கைதிகள் எதிரி முகாமிலிருந்து தப்பிப்பது சாதாரண நிகழ்வே. அதுவும் தமிழகத்தில் (இந்திய அளவிலும் தான்) ''தடா''வின் கீழ் அப்பாவிகளும், அரசியல் கைதிகளும்தான் பெரும்பான்மையோர் சிறையிடப்பட்டுள்ளனர். அப்பாவிகளுக்கும், அரசியல் கைதிகளுக்கும் தங்கள் மீது போடப்பட்ட பொய் வழக்குகளுக்கு எதிராக செயல்பட இருந்த சட்ட ரீதியான சிறிய வாய்ப்பும் உரிமையும்கூட இப்பாசிச - கொடிய சட்டத்தால் பறிக்கப்பட்டு விட்டது. விடுதலைப் புலிகளுக்கோ அனைத்து விசாரணைகளும் 'இரகசிய நீதிமன்றங்களிலேயே' நடத்தப்படுகிறது. நீதிமன்றங்களில் வழக்காடி உரிமைகளை நிலை நாட்டவும் முடியாத நிலை.

ராஜீவ் கொலையை சாக்காக வைத்து விடுதலைப் புலிகளை அரசியல் கைதிகளாக அல்லாமல் கிரிமினல்களாக சித்திரிக்கிறார்கள். இதில் சோ, சுப்ரமணியசாமி, தினமலர், தினமணி, பா.ஜ.க., இந்து முன்னணி ஆகிய கும்பல்கள் முன்னணி வகிக்கின்றன. கிரிமினல்கள் தப்பிக்கும் போதோ, ஜெயா பிறந்த நாளுக்காக கிரிமினல் கைதிகள் பொதுமன்னிப்பு வழங்கி திறந்து விடும் பொழுதோ, தாதா வீரமணி போன்ற கிரிமினல் கும்பல்கள் சிறையில் ''ராஜாக்களாக' உலவும் போதோ, ஜெயா கும்பலைச் சேர்ந்த ரௌடி எம்.எல்.ஏ., அமைச்சர்களின் அட்டூழியங்களின் போதோ வாய் திறக்காத அவ்வளவாக அலட்டிக் கொள்ளாத இக்கும்பல் விடுதலைப் புலிகள் தப்பிக்கும் போது மட்டும் வன்முறை பெருகும், அமைதி குலையும் என்று கத்துகிறது. கிரிமினல்கள் சிறையிலிருந்து, போலீசிடமிருந்து தப்பிப்பதை வீரசாகச கதைகளாக எழுதும் கிசுகிசு பத்திரிகைகள் விடுதலைப்புலிகள் தப்பித்ததைக் கொச்சைப்படுத்தி - இழிவு படுத்தி எழுதுகின்றன.

இந்திய கடல் எல்லைக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் சென்ற ''டாங்கனோவா'' என்ற கப்பலையும் கிட்டு தலைமையிலான கப்பலையும் அத்து மீறி போய் தாக்குதல் தொடுத்து பலரைக் கொன்றதும் சிலரை கைது செய்ததும் எந்த வகை நியாயம்? பார்ப்பன - பாசிச கும்பல் மட்டுமல்ல; நடுநிலையாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள்கூட விடுதலைப்புலிகள் தப்பித்ததைக் கண்டித்தார்களே ஒழிய சர்வதேச எல்லையில் சென்ற கப்பல்களை தாக்கிய இந்திய அரசின் அடாவடித்தனத்தை - ஆதிக்க வெறியை கண்டிக்கவில்லை.

விடுதலைப் புலிகளை கிரிமினல்களாக சித்தரிப்பதற்கு எதிராக கருணாநிதியோ, வை.கோ.வோ, ராமதாசோ குரல் கொடுக்க மாட்டார்கள் என்பது தெரிந்ததே. ஆனால் தமிழின விடுதலைப்புலி ஆதரவாளர்கள் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்?

●●●

பத்திரிகைகள், பார்ப்பன - பாசிஸ்டுகள், அறிவுஜீவி துறையினர் எல்லோரும் சிறை நிர்வாக முறைகேடுகள் - ஊழல்களை மையப்படுத்தி குற்றம் சுமத்தினர். ஆட்டோசங்கர் தப்பித்தபின் ஆய்வு செய்த இஸ்மாயில் அறிக்கை சுட்டிக்காட்டிய சிறை சீர்திருத்த நடவடிக்கைகள் அமுலாக்கப்படாததுதான் குற்றம் என்றனர். கைதிகளுக்கு சிறையில் உள்ள சலுகைகளையும் சிறை அதிகாரிகள் - காவலர்களின் ஊழல்களால் நடந்த/நடக்கும் முறைகேடுகளையும் பட்டியல் போட்டுக் காட்டினர். இவைகளை கண்டு

இந்திய அரசு அத்துமீறி சென்று கப்பலை தாக்கிப் பிடித்த விடுதலைப் புலிகள்





படிப்பகம்

www.padippakam.com

கொள்ளாமல் 'அலட்சியப்படுத்தியதாக ஆளுங்கட்சி மீது வாழப்பாடி, சுப்ரமணிய சுவாமி கும்பல் குற்றம் சுமத்தியது.

இதன் நேரடி விளைவாக ஆத்திரத்திற்குள்ளான ஜெயாகும்பலும் சிறைநிர்வாகமும் கூட்டு சேர்ந்து சென்னை மத்திய சிறைக் கைதிகள் மீது மூர்க்கமாகத் தாக்குதல் தொடுத்தன. உண்மைகள் மேலும் வெளிவராதவாறு கைதிகளின் வாயைக்கட்டிப் போடுவதும் தாக்குதலின் நோக்கமாக இருந்தது. தற்போது இதுவும் இக் கும்பலுக்குத் தலைவலி பிரச்சினையாகிவிட்டது.

''தடா'' கைதிகள், கிரிமினல் கைதிகள் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டனர். 85-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். யாரும் இறந்தார்களா என்பது தெரியவில்லை. பாதிக்கப்பட்ட ''தடா'' கைதிகளில் சிலர் வழக்கறிஞர்கள் மூலம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தே விசயத்தை வெளித் தெரிய வைத்தனர். உயர் நீதிமன்றம் நியமித்த நீதிபதி சிறைக்குச் சென்று விசாரணை நடத்தியபோதுகூட காயமடைந்தவர்கள் உண்மையைச் சொல்ல அஞ்சினர். தாக்குதல் நடந்தது உறுதியாகி, மருத்துவ சிகிச்சையளிக்கவும், காரணம் கோரியும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழக நிலைமைகளை ஆய்வு செய்த மனித உரிமைக் குழுவினர், சிறையின் அவலங்களையும் கொடுமைகளையும் மனித உரிமை மீறல்களையும் குறிப்பிட்டனர். சீர்திருத்தங்களையும் அடிப்படை உரிமை வழங்குதலையும் முன்மொழிந்து சென்றனர். இக்குழு பரிந்துரைத்தவை எவை மீதும் சிறிதும் அக்கறை செலுத்தப்படவில்லை. ஆனால் புலிகள் தப்பிச் சென்றதை சாக்கு வைத்து பாதுகாப்பு - அடக்குமுறை நடவடிக்கை எடுக்க மட்டும் ஜெயா கும்பல் அக்கறை காட்டியது. அனைத்து மத்திய சிறைகளிலும் கைதிகளும் உறவினர்களும் கண்ணாடி தடுப்பின் ஊடே பார்த்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்தார்கள். தொலைபேசியின் மூலம் நிர்வாகத்தின் கவனத்திற்குட்பட்டுத்தான் பேச முடியும். பார்வையாளர்கள் சந்திப்பதிலும் கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. கைதிகளுக்கு கிடைக்க வேண்டிய பொருட்கள் தேவையும் குறைக்கப்பட்டன. இவை அப்பட்டமான உரிமை மறுப்பு நடவடிக்கைகளாகும்.

உறவினர்கள் கொண்டு வந்து தரும் பொருட்கள் கிடைப்பதில்லை என்பதைவிட உறவினர்களுடன் பேசவோ குழந்தைகளை தொட்டுக் கொஞ்சவோ முடியாதவாறு கண்ணாடி சுவர் எழுப்பி தடுக்கும் கொடுமை கண்டுதான் கைதிகள் கொதித்துப் போனார்கள். சென்னை மத்திய சிறைக் கைதிகள் கண்டனம் தெரிவித்து சிறையறை சுவர் மீதேறி ஆர்ப்பாட்டமும் உண்ணாவிரதமும் நடத்தினர். கைதிகளில் 10 பேர் கொல்லப்பட்டதாக சாப்பாட்டு தட்டிலும் கல்கட்டிய தாளிலும் எழுதி சிறைக்கு வெளியே வீசியெறிந்தனர். அதன் பிறகுதான் சிறைநிர்வாகம் எதற்காகப் போராடுகிறார்கள் என்ற உண்மையைக் கூறி பத்திரிகையாளர்களை அனுமதித்துள்ளது.

மதுரை மற்றும் பாளையங்கோட்டை சிறைகளிலும் கண்டனம் தெரிவித்து போராடினர். மதுரை கைதிகள் 15 நாட்களாகப் போராடியும் செய்தி வெளித் தெரியவில்லை. உண்ண மறுத்து, சிறையறை கூரைகள் மீதேறி ஆர்ப்பாட்டம் செய்து, தாக்கிய வார்டர்களை திருப்பி தாக்கிய பின்னரே செய்தி வெளிவந்தது. ஒரு தலைமை வார்டரும் இரு கைதியும் இம்மோதலில் இறந்து போனார்கள். இதில் கைதியின் சாவு அலட்சியப் படுத்தப்பட்டு வார்டரின் சாவு மட்டும் முன்னிறுத்தப்பட்டு மீண்டும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதற்கு முன்னும் பின்னும் நடந்த தாக்குதலில் எத்தனை கைதிகள் இறந்தார்கள் என்று தெரியவில்லை. பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிக்க முடியாதவாறும் கொடிய அடக்குமுறை சிறை நிர்வாகத்தால் ஏவப்படுகிறது.

ராணுவம், போலீசு, சிறை மூன்றும் ஆளும் வர்க்கங்களின் நேரடி ஒடுக்குமுறை கருவிகள். போலீசு கொட்டடிகளைக் காட்டிலும் சிறைக் கொட்டடிகள் சட்ட விரோத முறையில் தாக்குதல் தொடுக்க சிறந்த அரணாக தனித்து வசதியாக உள்ளன. போலீசு, ராணுவம், சிறைத்துறையின் அட்டூழியங்கள், கொடுமைகளுக்கு எதிராக எத்துனை வழக்குகள், விசாரணை கமிட்டிகள் நடந்தாலும் குற்றவாளிகள் உரிய தண்டனை அடைந்ததாக வரலாறில்லை. நெருக்கடிகளுக்கேற்ப கண்துடைப்பு நடவடிக்கைகள் எடுப்பதும் அத்துறையின் மீதான நம்பிக்கையை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. மாறாக இதுபோன்ற சம்பவங்கள் நிகழும் போது சீர்திருத்தம் என்ற பெயரில் சட்டங்கள் கடுமையாக்கப்படுவதும் புதிய புதிய கறுப்புச் சட்டங்கள் போடப்படுவதும்தான் நடக்கிறது.

கிரிமினல் கைதிகள் கஞ்சா, அபின், பீடி, சிகரெட் என இருந்த உல்லாசமான வாழ்க்கைக்கு பாதிப்பு வந்ததாலேயே பிற கைதிகளையும் தூண்டிவிட்டு ரகளை செய்வதாகக் கூறி தமது பாசிச ஒடுக்குமுறையை சிறை நிர்வாகமும் ஜெயா கும்பலும் நியாயப்படுத்த முனைகின்றன. ஆனால் போதைப் பொருட்களை சிறைக்குள் விற்க அனுமதித்துக் கொள்ளையடிப்பது சிறை அதிகார வர்க்க கும்பல் தான் என்பது அனைவருக்கும் தெரியும். ஏன் அண்மையில் சென்னையில் கைதிகளைச் சிறையிலிருந்து நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று வரும் வழியில் திருடவும் மிரட்டி பணம் பறிக்கவும் அனுப்பி வைத்து சிறை நிர்வாகத்தினர் கூட்டுக் கொள்ளையடித்தது வெளிவந்து நாறியதே?!



மதுரை சிறைக் கைதிகள்; போலீசின் காட்டுமிராண்டித்தனம்

சிறைக் கைதிகளின் போராட்டத்தை கொச்சைப்படுத்துவதற்கும் அளவே இல்லாமல் போய்விட்டது. புலிகள் தப்பித்த விசயத்தை பின்னுக்குத் தள்ளுவதற்காகத்தான் சிலரின் தூண்டுதலால்தான் சிறைக் கைதிகள் கலகம் செய்கிறார்கள்; இதை எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் பெரிதாக்குகிறார்கள் என துக்ளக்கில் எழுதி பாசிஸ்டுக்கே உரிய வக்கிர புத்தியை காட்டியுள்ளார், சோ. அனைத்து கைதிகளுக்குரிய அடிப்படைத் தேவைகளும் ஜனநாயக உரிமைகளும் அளிக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டு கைதிகளையும் விடுதலைப் புலிகளையும் கடுமையாக ஒடுக்கவேண்டும் என்கிறார்கள். எனவே, பாசிச கும்பலின் பசப்பல்களுக்கு பலியாகாமல் வெளியிலிருந்து நாம் சிறைக்குள் நடக்கும் கொடிய அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

● ராசு



படிப்பகம்

www.padippakam.com

# காசி, மதுரா மீது போர்! ரத்தம் கேட்கும் இந்துவெறியர்கள்

**தடை செய்யப்பட்ட விசுவ இந்து பரிஷத், பகிரங்கமாகவே மீண்டும் மசூதி இடிப்பு நடவடிக்கையில் இறங்கிவிட்டதை காங்கிரசு வேடிக்கைப் பார்க்கிறது.**

ஈராண்டுகளுக்கு முன்புவரை ''அரே ராம்'' என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்த இந்து வெறியர்கள், இப்போது ''அர அர மகாதேவா'' என்று ஊளையிட்டுக் கொண்டு காசி விசுநாதர் கோயிலை 'விடுதலை' செய்யப் போவதாக கிளம்பியிருக்கிறார்கள்.

காசியிலுள்ள விசுவநாதர் கோயில் 2500 ஆண்டுகளுக்கு முன்பு விக்ரமாதித்ய மன்னனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. மத்திய காலத்தில் நடந்த இஸ்லாமிய படையெடுப்பு, மன்னர்களுக்கிடையிலான போர்கள், வென்றடக்குதல், கோயில் கருவறையில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள செல்வங்களைச் சூறையாடுதல் முதலானவற்றால் இக்கோயில் சிதிலமடைந்து போனது. அக்காலத்தில் இக்கோயிலின் ஒரு பகுதியில் மசூதியும் கட்டப்பட்டது. ஆயினும் அலாவுதீன் கில்ஜி, துக்ளக், சிக்கந்தர் லோடி ஆகிய மொகலாய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் நடந்த போர்களினால் கோயிலும் மசூதியும் தாக்கப்பட்டன. பின்னர் இவை புதுப்பிக்கப்பட்ட போதிலும் தொடர்ச்சியான போர்களினால் பெரிதும் சிதிலமடைந்தன.

தற்போது மசூதி உள்ள இடத்தில்தான் விசுவநாதர் ஆலயக் கருவறை இருந்தது என்றும், ஔரங்கசீப் காலத்தில் கோயில் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் மசூதி கட்டப்பட்டுள்ளது என்றும் புளுகுமூட்டையை அவிழ்த்துவிட்டு ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் இந்துக்களை அணிதிரட்டி வருகின்றன. அயோத்தி விவகாரம் போலவே, காசியிலுள்ள கியான்வாபி மசூதியை இடித்து விசுவநாதர் ஆலயத்தை விடுதலை செய்வோம் என்றும் மதுராவில் கிருஷ்ணன் கோயிலை ஒட்டியுள்ள முஸ்லீம்களின் இடுகாட்டில்தான் கோயில் கருவறை இருந்தது என்றும் அதைக் கைப்பற்ற வேண்டுமென்றும் இந்து வெறியர்கள் கொக்கரிக்கின்றனர். அயோத்தியைப் போலவே காசியிலும் மதுராவிலும் மோசடியான கல்வெட்டுகளைத் தயாரித்து அவற்றை ரகசியமாக கோயில் அருகே புதைத்து வைத்தும், தடயங்களை அழித்தும் வரலாற்றைத் திரித்துப் புரட்டும் சதிகளை ஏற்கனவே இந்து வெறியர்கள் செய்து வைத்துள்ளனர்.

அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்டதும் ஓங்கி வீசிய இந்துத்துவ அலையைச் சாதகமாக்கிக் கொண்டு காசியிலும் மதுராவிலும் தாக்குதல் நடத்துவதென்பது இந்துவெறியர்களின் நோக்கமாக இருந்தது. ஆனால் அடுத்த சிலமாதங்களிலேயே இந்துத்துவ அலை வற்றத் தொடங்கி நான்கு மாநிலங்களில் இந்து வெறியர்கள் ஆட்சியை இழந்தனர். இந்து வெறி பாசிச அமைப்பான விசுவ இந்து பரிஷத் மீது சட்டபூர்வ தடை விதிக்கப்பட்டது. மதவெறியை அரசியலுக்குப் பயன்படுத்தினால் பதவியை இழக்க நேரிடும் என்று தேர்தல் கமிஷன் கெடுபிடி செய்யத் தொடங்கியது. இவற்றால் தற்காலிகமாகப் பின்வாங்கிய இந்து வெறி பரிவாரங்கள், பாரதீய ஜனதாவை காங்கிரசுக்கு மாற்றான தேசிய அரசியல் கட்சியாகக் காட்டி ஓட்டுப் பொறுக்குவது, சாமியார்கள் - சங்கராச்சாரிகளை முன்னிறுத்தி விசுவ இந்து பரிஷத், பஜ்ரங் தளம் முதலான அமைப்புகள் இந்துவெறி பாசிச நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று புதிய வியூகம் அமைத்து செயல்படத் தொடங்கின. ஆனாலும் இந்துத்துவ அமைப்புகளிடமிருந்து விலகியிருப்பதாகக் காட்டிக் கொண்டு பாரதீய ஜனதா கட்சி மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியடைந்து விட்டன. அதன் சுதேசி இயக்கம், காஷ்மீரில் பாக். தீவிரவாதிகளை வெளியேற்றக் கோரும் இயக்கம், ஹுப்ளியில் முஸ்லிம்களின் ஈத்கா மைதானத்தில் 'தேசிய'க் கொடியேற்றும் இயக்கம் முதலான அனைத்தும் மக்களிடம் வரவேற்பு ஏதுமின்றி தோல்வியடைந்து விட்டன.

எனினும், மீண்டும் இந்துவெறியைக் கிளறிவிட்டு இந்துத்துவ அலையை உருவாக்கும் நோக்கத்தோடு இப்போது காசி விவகாரத்தைச் சூடேற்றுகின்றனர். இதோடு, விசுவ இந்து பரிஷத் மீதான தடையை நீக்கி அதை இந்து நலனுக்கான அமைப்பாகக் காட்ட வேண்டிய அவசியமும் அவர்களுக்கு உள்ளது. இந்த நோக்கத்தோடுதான் கடந்த ஜனவரி இறுதியில் சாதுக்கள் - சங்கராச்சாரிகளின் சம்மேளனத்தைக் கூட்டி விசுவ இந்து பரிஷத் தீவிரமாகச் செயல்படத் தொடங்கியது. அக்கூட்டத்தில் இந்துக்களின் புனித நாளாகக் கருதப்படும் ''மகா சிவராத்திரி'' நாளான பிப்ரவரி 27-ந் தேதியன்று காசி விசுவநாதர் ஆலய விடுதலைப் போராட்டத்தை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

அயோத்தி விவகாரத்தைப் போல, காசி விடுதலைப் போராட்டத்திற்கும் லட்சக்கணக்கில் இந்துக்கள் திரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வழக்கமாக வழிபாட்டுக்குத் திரளும் மக்களைவிட சற்றே அதிகமாகத்தான் கூட்டம் திரண்டது. அதிலும் உள்ளூர் வியாபாரிகளும் வர்த்தக நிறுவனங்களும் இந்துவெறியர்களின் தாக்குதலுக்கு அஞ்சி கடைகளை மூடிவிட்டதால் இப்போராட்டம் உற்சாகத்துடன் களைகட்டவில்லை. விசுவ இந்து பரிஷத் தலைவர்களான அசோக்சிங்கால், கிரிராஜ் கிஷோர், ஆபாசப் பெண் பேச்சாளரான உமா பாரதி முதலானோர் கோயிலில் சிலைகளுக்கு புனித நீராட்டு (ஜல அபிஷேகம்) செய்துவிட்டு உடனே கிளம்பிவிட்டனர்.

கியான்வாபி மசூதியை இடித்து தமது உரிமையை நிலைநாட்ட இந்து வெறியர்களுக்கு சட்டப்படியும் வரலாற்று ரீதியாகவும் தார்மீக அடிப்படையிலும் எவ்வித அருகதையும் நியாயமும் கிடையாது. மேலும், 1947-க்குப் பின் நாட்டிலுள்ள வழிபாட்டுத் தலங்களை எந்த மதத்தவர் பயன்படுத்துகிறார்களோ அதில் மற்றவர் தலையிட உரிமையில்லை என்று

காசி கோயிலும் மசூதியும்; இந்துவெறிக்கு அடுத்த இலக்கு?





படிப்பகம்

www.padippakam.com

1991-ல் நாடாளுமன்றமே தனது முடிவை அறிவித்துள்ளது. ஆயினும் அம்முடிவை ஏற்காமல் இந்துவெறியர்கள், சட்டவிரோதமான வழிகளின் மூலம் தமது நோக்கத்தைச் சாதிக்கத் துடிக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க, காசி விவகாரத்தைப் பொருத்தவரை இந்துவெறி பரிவாரங்களுக்கிடையே கருத்து வேறுபாடும் முரண்பாடும் நிலவுகிறது. பாரதீய ஜனதா தலைவர் வாஜ்பாய், அயோத்தியுடன் காசியை ஒப்பிடக் கூடாது என்கிறார். இன்றைய கட்டத்தில் காசி - மதுரா விவகாரங்களைக் கிளப்புவது சரியல்ல என்கிறார். காசியில் பெண் சாமியாரான உமாபாரதி, வெறியூட்டும் வகையில் பேசிய போதிலும் பாரதீய ஜனதா கட்சியினர் அக்கூட்டத்திற்குச் செல்லாமல் புறக்கணித்துள்ளனர். வெளிப்படையாக இந்துவெறி சக்திகளுடன் தம்மை இனங்காட்டிக் கொள்ளாமல், தூய்மையான தேசிய அரசியல்வாதிகளாகக் காட்டிக் கொள்ளும் உத்திதான் இது.

இந்து வெறியர்களுடன் கள்ளக் கூட்டு சேர்ந்துள்ள காங்கிரசு துரோகிகளோ, இந்துக்களின் ஏகப்பிரதிநிதியாகத் தம்மைக் காட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்தோடு, இந்துவெறியர்களின் அட்டகாசங்களைக் கைகட்டி நின்று வேடிக்கை பார்க்கின்றனர். அன்று அயோத்திக்கு இர(த்)த யாத்திரை நடத்திய இந்துவெறிக் குண்டர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய முலயம்சிங் யாதவ், இன்று காசியில் அவர்கள் அணிதிரள்வதைத் தடுக்கக்கூட முன்வரவில்லை. அவ்வாறு செய்தால் இந்து வெறியர்கள் அரசியல் ஆதாயமடைவார்கள் என்று அஞ்சி, தமது பதவியைப் பாதுகாத்துக் கொள்ளும் சந்தர்ப்பவாதியாக இருக்கிறார்.

இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் பகிரங்கமாக இந்துவெறியைக் கக்கிக் கொண்டு கொட்டமடிக்கின்றன. தடை செய்யப்பட்ட அமைப்பான விசுவ இந்து பரிஷத், பகிரங்கமாகவே காசி, மதுராவைக் கைப்பற்றுவோம் என்று கொக்கரிக்கிறது. குஜராத்தில் அண்மையில் நடந்த தேர்தலையொட்டி இந்து வெறியூட்டும் பொதுக் கூட்டங்களை எவ்விதத் தடையுமின்றி சுதந்திரமாக விசுவ இந்து பரிஷத் நடத்தியது. மேலும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை மனதில் கொண்டும் தற்காலிகமாக பின்வாங்கிய நிலையிலிருந்த இந்து வெறியர்கள் மீண்டும் மூர்க்கமாகக் கிளம்பியுள்ளனர். காசி, மதுரா என்று நாட்டை மீண்டும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் முன்னே, இந்துவெறியர்களின் சூழ்ச்சிகள் - சதிகளை உழைக்கும் மக்கள் விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டும்.

● பாலன்

## கோவை போலீசின் அடக்குமுறை

கடந்த சனவரி மாதம் 24-ந் தேதி கோவை ம.க.இ.க. தொடர்பு முகவரிக்கு வந்த போலீசார் அங்கிருந்த தோழர்கள் நசீம் இக்மத் மற்றும் மணிவண்ணன் இருவரிடமும் "உதவி ஆணையாளர் அழைக்கிறார்; வாருங்கள்" என அழைத்தனர்; இது தங்களைக் கைது செய்வதற்கான தந்திரம் என அறிந்திருந்த தோழர்கள், தெருவெங்கும் முழக்கமிட்டுக் கொண்டே அவர்களுடன் சென்றனர்.

போலீசு நிலையம் சென்றபின், "குடியரசு தினத்தையொட்டி தமிழகம் முழுவதும் தலைவர்களின் சிலைக்குக் குண்டு வைக்கப் போவதாக செய்தி வந்துள்ளது; அதனால் தடுப்புக் காவலில் உங்களைக் கைது செய்கிறோம்" எனத் தெரிவித்தார்கள். தோழர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். பின் உயர் அதிகாரிகள் அனைவரும் கூடிப் பேசிவிட்டு, அடுத்து வரும் இரு நாட்களும் (25 மற்றும் 26-1-95) காலை 10 மணிக்கு போலீசு நிலையத்திற்கு வர வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் விடுவித்தனர்.

ஒருபுறம் தோழர்களை வெளியே அனுப்பிவிட்டு, மறுபுறம் தனது புத்தியைக் காட்டத் தொடங்கியது கோவை போலீசு. அன்றிரவு தொ.பி.கு. தோழர்கள் சந்திரசேகரன் மற்றும் இராசேந்திரனின் வீடுகளுக்கு 4,5 முறை படையெடுத்தது; தோழர்களின் வீடுகளில் உள்ளவர்களை மட்டுமல்லாது அண்டை அயலாரையும் மிரட்டிச் சென்றது. 25-ந் தேதி மாலையில் தோழர்களைக் கைது செய்வதற்காக வந்த போலீசார், தோழர். கதிரவனின் பூட்டியிருந்த வீட்டை மற்றொரு சாவி போட்டு திறக்க முயன்றனர்.

துணை ஆணையாளர் இராகவாச்சாரி, உதவி ஆய்வாளர் சுரேஷ், (பூட்டைத் திறக்க முயன்றவர்) பி5 போலீசு நிலைய எழுத்தர் மணி மூவரும் இத் தேடுதல் வேட்டையில் மும்முரமாக இருந்தார்கள். நிபந்தனைப்படி மறுநாள் நசீம் இக்மத் போலீசு நிலையம் சென்ற பொழுதோ, தனது தேடுதல் வேட்டையை, திருட்டுத்தனத்தையெல்லாம் மறைத்துவிட்டு அப்பாவி போல் நாடகமாடியது.

## மதுரை போலீசின் பொய்வழக்கும் பத்திரிகைகளின் பொய்ப்பிரச்சாரமும்

கம்பம் பகுதியைச் சேர்ந்த வி.வி.மு. தோழர்கள் கிராமத்து ஆதிக்க சக்திகளையும் கிரிமினல் கும்பல்களையும் எதிர்த்து முறியடிப்பதற்குத் தற்காப்பு பயிற்சி அவசியம் என உணர்ந்து, மதுரை மாவட்டம் தேவதானப்பட்டி என்ற ஊரின் அருகிலுள்ள மஞ்சளாறு அணையின் கிடங்கு ஒன்றில் சிலம்பாட்ட பயிற்சி எடுத்து வந்தனர். அக்கிடங்கினைப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்து உதவிய குணசேகரனுக்கும் அவ்வூரைச் சேர்ந்த மணி என்ற நபருக்கும் ஏற்கனவே சொந்தப் பகை நிலவியதால், மணி "விடுதலைப் புலிகள் பயிற்சி எடுக்கின்றனர்" எனப் போலீசிடமும் அணை நிர்வாகத்திடமும் புகார் கொடுத்துள்ளான்.

முதலில் விசாரிக்க வந்த புலனாய்வு போலீசு தோழர்களின் பதிலால் மூக்குடைபட்டுச் சென்றது. நிலைமையை உணர்ந்து இடத்தைக் காலி செய்வதற்குள், ஆயுதங்களுடன் போலீசு வந்து பயிற்சியில் ஈடுபட்ட 2 பெண் தோழர்கள் உள்ளிட்ட ஒன்பது தோழர்களைக் கைது செய்தது; சிலம்பாட்ட கம்புகளையும் இரண்டு கத்திகளையும் பயங்கர ஆயுதங்களாகச் சித்திரித்து எடுத்துச் சென்றது.

"யாரைக் கொல்ல பயிற்சி எடுக்கிறீர்கள்?" என "கியூ" பிரிவு போலீசு நடராசன் குதர்க்கமாக கேள்வி கேட்டான். அதற்கு இளம் பெண் தோழர் தெய்வக்கனி துணிவோடு, "போலீசின் லஞ்ச ஊழல்களையும் அடக்குமுறைகளையும் சுட்டிக் காட்டி, அதனால் எங்களின் தற்காப்புக்காகப் பயிற்சி எடுக்கிறோம்" எனப் பதில் கூறினார். இதனால் வாயடைத்துப் போன போலீசு, பின் தோழர்களை 151/7 (1) (ஏ) என்ற பிரிவின் கீழ் சிறையில் அடைத்தது. பத்திரிகைகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பாக "தீவிரவாதிகள் ஆயுதப் பயிற்சி" என நீசத்தனமாக எழுதின.

சிறு பெண் என்றாலும் பயமின்றி போலீசை எதிர்த்துப் பதிலளித்தது, சிறையில் அடைக்கப்பட்ட மூன்றாம் நாளே நிபந்தனையின் அடிப்படையிலான பிணையில் வெளிவந்தது, பின் அதுவும் தளர்த்தப்பட்டது - இவையாவும் அமைப்பின் உறுதியினைப் பொதுமக்கள் மத்தியில் சிறந்த பிரச்சாரமாக எடுத்துச் சென்றன; மறுபுறம் போலீசோ பொய் வழக்கும் ஜோடிக்க முடியாததுடன், தோழர்களைப் பற்றிய முழு விவரங்களையும் அறிந்து கொள்ள முடியாது மூக்குடைப்பட்டுப் போனது!


படிப்பகம்

www.padippakam.com

# ம.தி.மு.க.-வுடன் கூட்டு சி.பி.எம்.-ன் சந்தர்ப்பவாதம்

**வை.கோ-விற்கு பாமரர்களிடம் செல்வாக்கில்லை என்று தெரிந்தும் போலி கம்யூனிஸ்டுகள் ம.தி.மு.க. தோளில் தொங்க முற்பட்டதற்கு காரணமிருக்கிறது**

தி.மு.க. பிளவுபட்டது யாருக்குப் புளியைக் கரைத்ததோ இல்லையோ தமிழக 'மார்க்சிஸ்டு' கட்சியினருக்கு வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது. கிளையில் ஆட்டம் என்றால் அதில் தொங்குகிற வௌவாலுக்கும்தானே ஆபத்து?! தி.மு.க., ம.தி.மு.க.- வின் பலத்தை அவதானித்து சோதித்துப் பார்த்த போலி கம்யூனிஸ்டுகளுக்கு வை.கோ.வின் வளர்ச்சியும் இளைஞர் பட்டாளத்தின் அணிவகுப்பும் பிரமையூட்டின. தி.மு.க.வுடனான உறவை முறித்துக் கொண்டு ம.தி.மு.க.வுடன் ஒட்டிக் கொண்டார்கள். இதுவும் தற்காலிகம்தான்; மீண்டும் தி.மு.க.வுடனோ, அல்லது அ.தி.மு.க-வுடனோ ஓடிப்போய் ஒட்டிக் கொள்வதற்கு ஒரு காலை முன் எடுத்து வைத்துத் தயாராகவே இருக்கிறார்கள் 'மார்க்சிஸ்டு'கள்.

தமிழக காங்கிரசு தலைமையிலிருந்து வாழப்பாடி கழட்டி விடப்பட்டதிலிருந்து அ.தி.மு.க.- காங்கிரசு கூட்டு பற்றிய பேச்சு அடிபடுகிறது. எனினும் ஜெயா, காங்கிரசுதான் கூட்டிற்காகத் தன்னிடம் கெஞ்ச வேண்டும் என்று எதிர்பார்க்கிற கர்வம் காரணமாக கூட்டணி அமையாமலும் போகலாம். அப்படி நிகழ்ந்தால் காங்கிரசை எதிர்ப்பதே பிரதானமானது என்று கூறி அ.தி.மு.க.வுடன் கூட்டு வைத்துக் கொள்ளவும் 'மார்க்சிஸ்டு'கள் தயங்கமாட்டார்கள். ஏனெனில் எல்லா கட்சிகளும் தனித்தனியாக நின்று போட்டியிடும் பொழுது ஓட்டுகள் பிரிந்து ஜெயா கும்பல் வெற்றி பெறலாம் என்பது பத்திரிகையாளர்களின் கணிப்பாக உள்ளது. மேலும் ஊழல், அடக்குமுறை, ஊதாரி செலவுகள் என ஆட்டம் போடும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் ஆட்சிக்கு எதிராக 'மார்க்சிஸ்டு'கள் பெரிய அளவிற்கு அழுத்தம் கொடுத்து எந்தப் போராட்டமும் நடத்தாததில் இருந்தும் புரிந்து கொள்ளலாம். தொழிற்சங்க ரீதியாக டி.வி.எஸ். போன்ற முதலாளிகளுக்கு எதிரான போராட்டத்திலும் இவர்களது அணுகுமுறை ஜெயா அரசுடன் சமரசமாக - இணக்கமாகப் போவதாகவே இருந்தது.

அதேசமயம் தி.மு.க., பா.ம.க., எம்.ஜி.ஆர். அ.தி.மு.க., சி.பி.ஐ. கூட்டணி அமைவது போன்ற நிலையும் வெற்றி பெறுமோ என்ற சந்தேகமும் நிலவுவதால் தி.மு.க.வுடன் மீண்டும் ஓடிப் போய் ஒட்டிக் கொள்ளும் நப்பாசையும் 'மார்க்சிஸ்டு'களுக்கு உண்டு. ''தி.மு.க.வுடன் எங்களுக்குப் பகையில்லை; எவ்விதக் கோபமும் இல்லை'' என்று புதிய மாநிலச் செயலாளர் சங்கரைய்யா பேட்டி கொடுத்து அஸ்திவாரம் போட்டிருக்கிறார்.

பெருந்துறை இடைத்தேர்தலில் ம.தி.மு.க. இரண்டாவது நிலையில் அதிக ஓட்டுகள் பெற்றிருந்ததும் வை.கோ.விற்குப் பின்னால் இளைஞர்கள் பெருவாரியாகத் திரண்டதும் குறுகிய காலத்தில் வை.கோ.விற்குக் கிடைத்த குறிப்பிட்ட அளவு பெயரும் புகழும் 'மார்க்சிஸ்டு'களை மயக்கத்தில் ஆழ்த்தியுள்ளன. வை.கோபால்சாமிக்கு பெண்கள், கிராமத்தவர்கள் மத்தியில் செல்வாக்கில்லை என்று தெரிந்திருந்தாலும் 'மார்க்சிஸ்டுகள்' ஏன் ம.தி.மு.க. தோளில் தொங்க முடிவுசெய்தனர் என்றால் அதற்கு இரு காரணமிருக்கிறது. ஒன்று, இதுவரை அ.தி.மு.க., தி.மு.க.வுடன் கூட்டு வைத்தபோதெல்லாம் 20,30 சீட்டுகள்தான் ஒதுக்கித் தந்தார்கள்; புதிய கட்சியாகிய ம.தி.மு.க.-வுடனோ சம அந்தஸ்து கோரி 100 சீட்டுகளுக்கு மேலாகப் பெற்று அதிக இடங்களில் போட்டியிடலாம் என்று கருதுகிறார்கள் 'மார்க்சிஸ்டு'கள். மற்றொன்று, திராவிடக் கட்சிகளுடன் கூட்டு வைத்து அவர்களது அணிகளை வென்றெடுத்துதான் கட்சி வளர்க்க முடியும் என்பது 'மார்க்சிஸ்டு'களின் ஒரு கொள்கை! எனவே ம.தி.மு.க. விலுள்ள இளைஞர்களை வென்றெடுக்கும் நோக்கிலும்தான் இக்கூட்டு!

சங்கரய்யா, வை.கோ.; ஆதாயக் கூட்டு



ஆனால் உண்மை என்ன தெரியுமா? இவர்களது அணிகள் மட்டுமல்ல இரண்டாம் மட்டத் தலைமையிலிருந்தவர்கள் வரை தி.மு.க.விற்கும் அ.தி.மு.க.விற்கும் ஓடிப்போயிருக்கிறார்கள். எண்ணிக்கைக்காக சேர்த்துக் கொண்ட இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் (DYFI) சேர்ந்த இளைஞர்களில், இந்திய மாணவர் சங்கத்தைச்(SFI) சேர்ந்த மாணவர்களில் பலர் ம.தி.மு.க., சி.பி.எம்.கூட்டுக்கு முன்பே வை.கோ. பின்னால் போய்விட்டார்கள். ம.தி.மு.க.வுடன் கூட்டு வைத்துக் கொண்டால் ஒரு வேளை இவர்களையாவது திரும்பக் கூட்டி வரமுடியாதா என 'மார்க்சிஸ்டு'கள் கணக்குப் போட்டிருக்கிறார்களோ என்னவோ?!

தி.மு.க-வுடன் உறவை முறித்துக் கொண்டு ம.தி.மு.க-வுடன் உடனடியாக ஒட்டிக் கொள்ளாமல் கால அவகாசம் எடுத்துக்கொண்டதற்கும் காரணமிருக்கிறது. விடுதலைப்புலிகள் தொடர்பாக வை.கோ-வின் அணுகுமுறை'மார்க்சிஸ்டு'களுக்குக் குழப்பமாகவும் அச்சமாகவும் இருந்தது. விடுதலைப்புலிகள் ஆதரவில் வை.கோ. ஏற்கனவே பல்டி அடித்திருந்தாலும் எதிர்ப்பாளர்தான் என்பதை அறுதியிட்டுக் கூறுவதற்காகக் காத்திருந்தனர். இதுவே ம.தி.மு.க., சி.பி.எம். கூட்டுக்குத் தடையாக இருப்பதாக பேசி வை.கோ-விற்கு நெருக்கடியும் கொடுத்தனர். சென்னை-வெட்டுவான்கேணி பகுதியில் தான் வைத்திருந்த குண்டு வெடித்துப் பலியாகிய ஒரு விடுதலைப்புலிக்கு உதவியதாக ம.தி.மு.க. பிரமுகர் சுந்தரம் ''தடா''வில் கைது செய்யப்பட்டார். அப்பொழுது வை.கோபால்சாமி சுந்தரத்தைக் கட்சியிலிருந்து நீக்கித் தொடர்பில்லை என்று அறிவித்ததோடு, விடுதலைப் புலிகள் ஆதரவில்லை என்பதையும் பகிரங்கமாக அறிவித்தார். இதற்குப் பிறகுதான் 'மார்க்சிஸ்டு'கள் நம்பிக்கை பெற்று ம.தி.மு.க. தோளில் கை போட்டார்கள்.

www.padippakam.com

இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு ம.தி.மு.க.-சி.பி.எம். கூட்டு ''கொள்கைக் கூட்டணி'' என்று தம்பட்டம் அடிக்கிறார்கள். வேடிக்கை என்னவென்றால் இதே 'முழக்கத்தை ம.தி.மு.க.வும் தூக்கிப்பிடித்துக்கொண்டு தனக்கு முற்போக்கு சாயம் பூசமுனைந்ததுதான். 'மார்க்சிஸ்டு'களின் கொள்கை(!) எப்படி எல்லா திராவிடக் கட்சிகளுடனும் ஒத்துப்போகிறது என்பதுதான் புரியவில்லை?! இரு கட்சியினரும் இணைந்து தமிழகமெங்கும் கூட்டணியின் 'கொள்கை' விளக்கக் கூட்டங்களையும் நடத்தினர். ஒருவரை மாற்றி ஒருவர் புகழ்ந்து சொரிந்து கொண்டதைத் தவிர இவர்களது 'கொள்கை' என்னவென்று இன்னும் மக்களுக்கு விளங்கவில்லை.

தி.மு.க.வுடன் இருந்த கூட்டணியிலிருந்து சி.பி.எம்.கட்சியினர் தாமாகத்தான் பிரிந்து வந்தார்கள் என்று சி.பி.ஐ. கட்சியின் மாநிலச் செயலர் அறிக்கை வெளியிட்டார். பிரிந்ததற்கும் சரி, ம.தி.மு.க.-வுடன் சேர்ந்ததற்கும் சரி எந்த 'கொள்கை' காரணமும் இல்லை என்பதை வலது போலிக் கம்யூனிஸ்டுகளே சுட்டிக் காட்டுகிறார்கள்.

> ''நானும் கம்யூனிஸ்டுதான்'' என பெரியாரிலிருந்து வை.கோ. வரை சுயதம்பட்டம் அடித்து ஏய்ப்பதற்குத்தான் போலி கம்யூனிஸ்டுகளின் உறவு இதுவரை பயன்பட்டிருக்கிறது

தமிழக சட்டமன்றத்திற்குரிய தேர்தலுக்கு இன்னும் ஒரு ஆண்டு காலம் இருக்கையில் அதற்கான தயாரிப்பை அரசியல் கட்சிகள் இப்பொழுதே யோசிக்கத் தொடங்கிவிட்டன. எந்தக் கட்சியும் தனித்து நின்றால் வெற்றிபெற முடியாது என்ற முடிவுக்கு வந்து கூட்டணி அமைக்க முயன்று சிந்தித்து வருகின்றன. கூட்டணி வைத்தாலும் அருதிப் பெரும்பான்மை பெறமுடியுமா என்ற சந்தேகமும் குழப்பமும் உள்ளன. இதில் அதிகம் குழம்பிப் போயிருப்பது வை.கோ.தலைமையிலான ம.தி.மு.க. என்று கூறலாம்.

கருணாநிதியை எதிர்ப்பதையே முழுமூச்சாக வைத்துக் குறிப்பிட்ட அளவிற்கு அணிகளைத் திரட்டிக் கொண்ட வை.கோபால்சாமிக்கு மக்களைத் திரட்டுவது என்பது குதிரைக் கொம்பாகிவிட்டது. 'வரலாறு காணாத' நடைப்பயணம், அதிரடி முழக்கங்கள், அதிரடி நடவடிக்கைகள், வை.கோ-வின் பெயரையும் மூஞ்சியையும் மட்டுமே வைத்து செய்த பிரச்சாரங்கள் எல்லாம் கட்சிக்கு செல்வாக்கைக் குறிப்பிட்ட வட்டத்திற்குள்தான் பெற்றுதந்ததே ஒழிய பாமரர்களைக் கவரவில்லை. மேலும் அதற்குள்ளாகவே கட்சிக்குள் கோஷ்டி சண்டைகள் வந்து கருணாநிதி பக்கம் மீண்டும் ஓடிப்போய் சிலர் ஒட்டிக் கொண்டது; எந்நேரமும் குதிரை வியாபாரம் நடப்பதால் யாரும் ஆதர்யம் கருதி ஓடிவிடலாம் என்பதால் கண்காணித்துத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்ற நெருக்கடியும் கோபால்சாமிக்குத் தலைவலியாக உள்ளன. இந்நிலையில் சி.பி.எம். கரம் மட்டுமல்ல எவர் கரத்தை வேண்டுமானாலும் பற்றிக்கொள்கிற மனநிலை கோபால்சாமிக்கு வந்துவிட்டதே ஒழிய சி.பி.எம்.உடன் சேர்ந்ததில் கொள்கையுமில்லை; வெங்காயமுமில்லை.

பார்ப்பன எதிர்ப்பு, விடுதலைப் புலிகள்-தனிஈழ ஆதரவு போன்றவற்றில் கோபால்சாமி பல்டியடித்து சுயரூபத்தைக் காட்டிவிட்டார் என்பது ஒருபுறம் இருக்கட்டும். ஜெயலலிதாவின் உதிர்ந்த ரோமங்களையும் பாசிச எம்.ஜி.ஆர். புகழ் பாடுவதையும் கட்சிக்குள் சேர்த்துக் கொண்டதை என்னவென்று சொல்வது? தஞ்சையில் ஜி. விசுவநாதன், அழகு திருநாவுக்கரசு, எஸ்.ஆர்.ராதா ஆகியோர் ம.தி.மு.க.வில் இணையும் விழா நடத்தி பெரியார், அண்ணாவுக்கு அடுத்த வழிகாட்டித் தலைவராக எம்.ஜி.ஆரையும் சேர்த்துக்கொண்டதாக அறிவித்தார், கோபால்சாமி. எம்.ஜி.ஆர். துதிபாடி ஆதாயம் தேடுவதில் குருநாதர் கருணாநிதியைக் காட்டிலும் கீழிறங்கி வெட்கங்கெட்டு நடந்து கொள்கிறார்; திரையுலகில் பாக்கியராஜ், சத்யராஜ், ராமராஜன் முதலியோர் எம்.ஜி.ஆரின் வாரிசு என்று சுயதம்பட்டம் அடித்துக் கொள்வதைப் போல.

நாற்காலியை நோக்கிய ஓட்டப்பந்தயத்தில் எதையும் செய்யத் தயாராயிருக்கும் இன்னொரு பிழைப்புவாத கும்பலோடு கூட்டுச் சேர்ந்திருக்கும் 'மார்க்சிஸ்டு'களை, நாடாளுமன்ற ஜனநாயக சாக்கடையில் அடையாளமே இல்லாமல் கரைந்து கொண்டிருக்கும் போலி கம்யூனிஸ்டுகளை வாழ்த்துவோம். ''நானும் கம்யூனிஸ்டுதான்'' என பெரியாரிலிருந்து வை.கோ. வரை சுயதம்பட்டம் அடித்து ஏய்ப்பதற்குத்தான் போலி கம்யூனிஸ்டுகளின் உறவு இதுவரை பயன்பட்டிருக்கிறது. இந்த இரு கும்பலிடமிருந்தும் கம்யூனிசத்தைக் காப்பாற்ற வேண்டியுள்ளது.

● சுப்பு

## நூல் விலையேற்றத்தைக் கண்டித்து கூட்டம்

சேலம் மாவட்டம் பள்ளிபாளையத்தில் 5-2-95 அன்று புரட்சிகர விசைத்தறி தொழிலாளர் சங்கத்தின் சார்பாக நூல் விலை உயர்வினையும் பருத்தி ஏற்றுமதியையும் கண்டித்துப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பு.வி.தொ.ச. தோழர்கள் தர்மராசு, வேணுகோபால், பாரதமிகுமின் நிலையத்தின் பைப்பிங் சென்டர் ஸ்டாப் யூனியனின் பொதுச் செயலாளர் தோழர் தங்கராசு, பு.மா.இ.மு. தோழர் ஜெகதீசன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். காட் - டங்கல் ஒப்பந்தம் குறித்தும், ஓட்டுக் கட்சியினைச் சேர்ந்த தொழிற்சங்கங்களின் ஓட்டாண்டித்தனத்தையும் சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் தோழர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

● பள்ளிப்பாளையம் அருகேயுள்ள கண்டிப்புதூரில் வசித்து வரும் பழனியம்மாவின் மகளும் அவரது கணவரும் கடன் தொல்லை (ரூ.20,000) தாங்க முடியாது ஊரைவிட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறிவிட்டனர். இதனால் கடன் கொடுத்திருந்த தறிக்கூட முதலாளி பாலு, பழனியம்மாளின் கணவரைத் தனது தறிக்கூடத்திற்கு அழைத்துச் சென்று இரவு பகலாக வேலை வாங்கியுள்ளார். இரண்டு நாட்களாகத் தனது கணவர் வீட்டிற்கு வாராததால், பழனியம்மாள் சங்கத்திடம் இது பற்றி முறையிட்டார். சங்கத் தோழர்கள் உரிய நடவடிக்கையெடுத்து அவருக்கும் கடனுக்கும் தொடர்பில்லையென முதலாளியை எழுதிக் கொடுக்க வைத்தனர்.

● கணேசன் என்ற விசைத்தறி தொழிலாளிக்கு கொடுத்த தீபாவளி போனஸ் தொகையை அவர் வேலையை விட்டு நின்றுவிட்டார் என்பதற்காக அடாவடித்தனமாக முதலாளி பெற்றுக் கொண்ட விசயத்திலும், சேகர் என்ற விசைத்தறி தொழிலாளியை, அவர் ''வேலையை விட்டு நின்று கொள்கிறேன்'' எனக் கூறியதற்கு அத்தறிக்கூட முதலாளி தகாத வார்த்தைகளால் திட்டி தாக்கிய விசயத்திலும், இரவு நேரத்தில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த சங்கத்தைச் சேர்ந்த தோழர்.ரகுவையும் இன்னும் சில தொழிலாளர்களையும் எதிர்த்துப் பேசியதற்காக போலீசு பிடித்துச் சென்றபோதும் சங்கம் நேரிடையாகத் தலையிட்டுச் சரியான நடவடிக்கைகளை எடுத்தது. இவையாவும் விசைத்தறி தொழிலாளர்கள் மத்தியில் ஓட்டுக்கட்சி தொழிற்சங்கங்களுக்கு மாற்றாக, பு.வி.தொ.ச. சிறுகசிறுக வேர் பிடித்துப் பலமாகி வருவதையே காட்டுகின்றன.

www.padippakam.com



## கறுப்பு அங்கிக்குள் ஊழல் பெருச்சாளி

முதலாளித்துவ மூதறிஞர்களால் புனிதமானதாகச் சித்தரிக்கப்படும் இந்திய நீதித்துறை, இப்போது ஊழல் மோசடிகளில் மூழ்கி நாடெங்கும் நாறி வருகிறது. அண்மையில் பம்பாய் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியான ஏ.பி. பட்டாசார்ஜி, பிரிட்டனிலுள்ள ஒரு புத்தக நிறுவனத்திடமிருந்து 25 லட்ச ரூபாய் ''ராயல்டி''யாகப் பெற்றுள்ளார். 12 ஆண்டுகளுக்கு முன்பு கல்கத்தாவில் ''முஸ்லீம் சட்டமும் அரசியலமைப்புச் சட்டமும்'' என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகள் சின்னஞ்சிறு நூலாக வெளி வந்தது. தற்போது அந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளியாவதையொட்டி இவ்வளவு பெரிய தொகை ராயல்டியாகப் பெற்றுள்ளதாக அவர் கூறுகிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்நூலை மறுபதிப்பு செய்யும் ரோபக் நிறுவனமோ பிரிட்டனின் சாதாரண பதிப்பகம்தான். மேலும் இந்நூலைப் படித்து ஆராய்ந்தவர்கள் இதற்கு 2500 ரூபாய்கூட ''ராயல்டி'' கிடைக்க வாய்ப்பில்லை என்று அறுதியிடுகிறார்கள். இது மட்டுமின்றி இந்நூலின் அராபிய மொழி பதிப்பிற்கான ராயல்டியாக 17 லட்ச ரூபாய்க்கு பேரம் நடந்துள்ளது. முழுப் பூசணிக்காயை சோற்றுப் பருக்கையில் மறைக்கும் இம்மோசடியைக் கண்டு ஆத்திரமடைந்த பம்பாய் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் தலைமை நீதிபதியைப் பதவி விலகக் கோரியதோடு, அவர் நடத்தும் விசாரணைகளையும் புறக்கணித்தனர். நிலைமை விபரீதமாவதை உணர்ந்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, பட்டாசார்ஜியை அழைத்து, அறிவுரைத்ததன் பேரில் இப்போது

**மோசடி அம்பலமாகி பதவி விலகிய பம்பாய் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பட்டாசார்ஜி**



அவர் பதவி விலகியுள்ளார். மேற்காசிய ரகசிய உலகப் பேர்வழிகளுக்கும் நீதிபதி பட்டாச்சார்ஜியாவுக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் தமது கூட்டாளியும் பியர்லெஸ் நிதிநிறுவனத்தின் பெரும் பங்குதாரருமான பாரஸ்மல் லோடா மூலம் இந்த லஞ்சத் தொகை சுற்று வழிகளின் ஊடாக அளிக்கப்பட்டுள்ளது என்றும் நீதிமன்றத் தாழ்வாரங்களில் கிசுகிசுக்கப்படுகிறது. ஆயினும் நீதிபதி மீது விசாரணை ஏதுமின்றி இந்த விவகாரம் மறைக்கப்பட்டுவிட்டது.

பட்டாச்சார்ஜியா மட்டுமல்ல; அவருக்கு 15 நாட்கள் முன்பாக மற்றொரு நீதிபதியான விஜய் பகுகுணா ஊழல் மோசடிகளால் அம்பலப்பட்டு பதவி விலகினார். 1990-இல் நீதிபதிகள் சரத் மனோகர், கோட்வால், கேனியா ஆகியோரது லஞ்ச ஊழல் நடவடிக்கைகளைக் கண்டு வழக்கறிஞர்கள் சங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழகத்தைச் சேர்ந்த நீதிபதி ராமசாமி ஊழல் - முறைகேடுகளில் சிக்கி நான்காண்டுகளுக்கு முன்பு அம்பலப்பட்டார். ஆனாலும் அவர் மீது நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம்கூட நிறைவேற்ற முடியவில்லை. சுருக்கமாகச் சொன்னால் அரசியல்வாதிகள், அதிகாரிகள், கவர்னர்கள், நீதிபதிகள், ராணுவத் தளபதிகள் உள்ளிட்டு ஒட்டு மொத்த அரசியலமைப்பே கெட்டழுகி நாறுகிறது. ஆனாலும் நீதித்துறையின் புனிதத்தைக் காக்க வேண்டுமென்று முதலாளித்துவ முட்டாள்கள் சவக்கிடங்கில் சாம்பிராணி புகையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

## காரென் போராளி இயக்கத்தில் பிளவும் பேரிழப்பும்

உலகின் தொன்மை வாய்ந்த தேசிய சுயநிர்ணய போராளிகளின் இயக்கமான பர்மாவின் காரென் தேசிய யூனியன் (KNU), ஓடுகாலிகள் - சீர்குலைவுவாதிகளின் துரோகத்தால் பிளவுபட்டு பின்னடைவுக்குள்ளாகியுள்ளது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு மியான்மார் (பர்மா) அரசப் படைகள் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலால் காரென் போராளிகளின் தளப்பகுதியும் தலைமையகமுமான மானேர்ப்ளாவ் கிராமம் வீழ்ச்சியடைந்து எதிரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

காரென் தேசிய யூனியன், தெற்காசியாவில் மிகப் பழமையான போராட்டப் பாரம்பரியமிக்க போராளிகளின் இயக்கமாகும். மியான்மாரின் ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிரான ஜனநாயக இயக்கக் கூட்டமைப்பில் (DAB), இப்போராளிகள் அமைப்பும் ஓர் உறுப்பினராக இருந்தது. தலைநகர் யங்கூனுக்கு தென்கிழக்கே தாய்லாந்து எல்லையை ஒட்டி சால்வின் ஆற்றங்கரையிலுள்ள மானேர்ப்ளாவ் வட்டாரம், 1988-இலிருந்தே ஜனநாயகத்துக்கான இயக்கத்தின் தலைமையகமாகத் திகழ்ந்தது.

ஆனால் இப்போது புத்தமதவாதிகளைக் கொண்ட ஒரு சிறு கும்பல் துரோகமிழைத்ததன் விளைவாக, காரென் இயக்கமே பிளவுபட்டு பின்னடைவுக்குள்ளாகியுள்ளது.

துரோகிகள் தம்மை ஜனநாயக புத்த கயின் அமைப்பு (DBKO), என்றழைத்துக் கொண்டு போராளி இயக்கத்தையே பிளவுபடுத்தினர். மானேர்பிளாவ் தலைமையகத்தை அரச படைகளின் உதவியோடு கைப்பற்றியுள்ளனர். இதைச் சாதகமாக்கிக் கொண்டு மியான்மார் ராணுவ சர்வாதிகாரிகள் காரென் போராளிகள் மீது தாக்குதல் நடத்தி வரும் அதே சமயம், துரோகிகளை காரென் தேசிய இன மக்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளாக அறிவித்து சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். அரச பயங்கரவாதிகள் மற்றும் துரோகிகளின் தாக்குதலுக்கு அஞ்சி காரென் தேசிய இன மக்கள் தாய்லாந்துக்கு அகதிகளாகத் தப்பியோடுகிறார்கள்.

மியான்மரின் ராணுவ சர்வாதிகார எதிர்ப்புக்

www.padippakam.com



கோட்டையாகத் திகழ்ந்த மானெர்பிளாவ் தளத்தின் வீழ்ச்சியானது, மியான்மார் ஜனநாயக இயக்கத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். இந்திய பாசிச ஆட்சியாளர்களைப் போல, போராட்ட அமைப்புகளைப் பிளவுபடுத்தி தாக்கி அழித்தும், துரோகிகளை 'தேசிய' நீரோட்டத்தில் நிறுவனமயமாக்கியும் மியான்மார் சர்வாதிகாரிகள் மேற்கொள்ளும் சூழ்ச்சிகள் - சதிகளை எதிர்கொண்டு முறியடிக்கும் வகையில் காரென் போராளிகள் அரசியல் - சித்தாந்த பலமும் ஒற்றுமையின்றிப் போனதே இதற்கு அடிப்படையாகும். மறுபுறம் மியான்மாரின் ஜனநாயகத்துக்கான இயக்கத்தை ஆதரித்து ஆரவார நாடகமாடிய ஏகாதிபத்தியங்கள் இன்று வாய் மூடிக் கிடக்கின்றன. மியான்மாரின் அரசுத்துறை ஏகபோக பொருளாதாரத்தைத் தகர்த்து, தனியார் மய - தாராளமயமாக்கும் நோக்கத்துடனேயே சர்வாதிகார ஆட்சியாளர்களை எதிர்த்து ஜனநாயகத்துக்கான இயக்கத்தை அவை ஆதரித்தன. மியான்மார் ராணுவ சர்வாதிகாரிகள் இப்போது தனியார்மயக் கொள்கைக்கு கதவை அகலத் திறந்து விட்டுள்ளதால், தமக்கு ஆதாயமில்லை என்பதால் ஜனநாயக இயக்கங்களின் மீது அடக்குமுறை ஏவப்பட்ட போதிலும் ஏகாதிபத்தியங்கள் வாய் மூடிக் கிடக்கின்றன.

## சோமாலியா:

## ஆக்கிரமிப்பு அம்பலம் அமெரிக்கப்படை வெளியேற்றம்

பஞ்சம் பாரித்த ஆப்பிரிக்க ஏழை நாடான சோமாலியாவில் மனிதாபிமான உதவிகளைச் செய்வதாகக் கூறிக் கொண்டு அந்நாட்டை ஆக்கிரமித்த அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள், இப்போது விட்டால் போதும் என்று பின்னங்கால் பிடறியில் பட வெளியேறி விட்டன.

1992-இல் சோமாலியாவில் மனிதாபிமான உதவிகளைச் செய்வதாகக் கூறிக் கொண்ட அமைதிப்படைகள், பின்னர் சட்ட ஒழுங்கையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டப் போவதாகக் கூறி சோமாலிய இனக் குழுக்கள் மீதே தாக்குதல் நடத்தின. ஆத்திரமடைந்த சோமாலிய மக்கள் அமைதிப் படைகளை வெளியேறுமாறு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். குறிப்பாக சோமாலியாவின் இனக்குழு தலைவரான அய்தீத் தனது படைகளைக் கொண்டு அமெரிக்க துருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தி வந்தார். இனவெறி பிடித்த அராஜக கும்பலாக இருப்பினும், அய்தீத் படையினர் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து, அதன் படை வீரர்களை சுட்டுக் கொன்று தெருக்களில் நாயைப் போல இழுத்து வந்து காறித்துப்பி கேவலப்படுத்தினர். தொலைக்காட்சியில் இவற்றைக் கண்ட அமெரிக்க மக்கள் ஆத்திரமடைந்து கிளிண்டனின் வெளியுறவுக் கொள்கையைச் சாடத் தொடங்கினர். படை வீரர்கள் கொல்லப்படுவது, பெருகிவரும் ராணுவச் செலவுகள், உள் நாட்டில் கிளிண்டனின் செல்வாக்கு சரிந்து வருதல் முதலானவற்றாலும் சோமாலியாவில் இனி ஆதாயம் ஏதுமில்லை என்பதாலும் ஐ.நா. மன்றத்தின் பெயரால் தனது ஆக்கிரமிப்புப் படைகளை அமெரிக்கா விலக்கிக் கொண்டு இப்போது வெளியேறியுள்ளது.

இதே போல, முன்னாள் யூகோஸ்லாவியாவில் குரேஷியர்களுக்கும் செர்பியர்களுக்குமிடையே ஐ.நா. மன்றத்தின் மூலமான தற்காலிக போர் நிறுத்த சமாதான ஒப்பந்தம் கந்தலாகி வருகிறது. ஐ.நா. படைகளுக்குப் பாதுகாப்பாக அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோ நாடுகளின் படையை நிறுத்த அமெரிக்கா முயற்சிக்கிறது. அவ்வாறு செய்தால் அது ஐரோப்பியாவில் அமெரிக்காவின் மேலாதிக்கத்துக்கு ஒப்புதல் அளிப்பதாகி விடும் என்று ஐரோப்பிய நாடுகள் எதிர்க்கின்றன. அமைதிப் படைகளின் பெயரால் ஐரோப்பாவை மேலாதிக்கம் செய்ய அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததால், இப்போது முன்னாள் யூகோஸ்லாவியாவிலிருந்து



இராணுவக் கவச வண்டி பாதுகாப்புடன் சோமாலியா விலிருந்து வெளியேறும் அமெரிக்கப் படைகள்

ஐ.நா. அமைதிப் படைகள் வெளியேற முடிவு செய்துள்ளன.

தமது மேலாதிக்க ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்குச் சாதகமாக இருந்தால் படைகளைக் குவிப்பது; ஆதாயமில்லா விட்டால் படைகளை விலக்கிக் கொண்டு பொதுக்கருத்துக்கு மதிப்பளிப்பதாக நாடகமாடுவது என்பதுதான் ஏகாதிபத்தியங்களின் உத்தி. இருப்பினும் அமைதிப் படைகளை அனுப்பும் உத்தி எப்போதும் வெற்றியைத் தந்து விடுவதில்லை. இதன் காரணமாக ஏகாதிபத்தியங்கள் சைவப்புலிகளாகி விடுவதுமில்லை. வேறு காரணங்களைக் கூறி நேரடி ஆக்கிரமிப்புக்கு அவை தயங்குவதுமில்லை. சோமாலியா, யூகோஸ்லாவியாவிலிருந்து ஏகாதிபத்திய படைகளின் வெளியேற்றம் இவற்றை மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

## ஷார்-இ-ஷெரீப் முற்றுகை: மீண்டும் ஒரு ஹஸ்ரத்பால்.

காஷ்மீரில் ஜூலை மாதத்தில் 'குடியரசு'த் தலைவர் ஆட்சி முடிவுக்கு வர உள்ளது. அதை மீண்டும் நீட்டிக்கும் நோக்கத்துடன் இந்திய ஆட்சியாளர்கள் புதியதொரு பயங்கரவாதச் சதி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். ஒருபுறம் காஷ்மீர் தேர்தலுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருவதாக நாடகமாடிக்கொண்டே மறுபுறம், காஷ்மீர் போராளிகளால் தேர்தலுக்குப் பேரபாயம் ஏற்பட்டுள்ளதாகப் பீதி யூட்டி ஒடுக்கும் நோக்கத்துடனேயே அவர்கள் கிளம்பியுள்ளனர்.

மத்திய காஷ்மீரில் ஷார்-இ-ஷெரீப் எனும் சிறுநகரிலுள்ள மசூதி முஸ்லிம்களின் புனிதத் தலமாகும். இந்நகரம் ஹிஸ்புல் முஜாகிதீன் போராளிகளின் புகலிடமாக உள்ளது. இராணுவத்தின் தேடுதல் வேட்டை

படிப்பகம்

www.padippakam.com



காரணமாக சில போராளிகள் இம்மசூதியில் தஞ்சமடைந்துள்ளனர். ''இவர்களுடன் பாகிஸ்தான், ஆப்கான் நாட்டுத் தீவிரவாதிகளும் இம்மசூதியில் தங்கிக் கொண்டு போராளிகளுக்கு ஆயுத உதவியும் பயிற்சியும் அளிக்கின்றனர். அவர்களை வெளியேற்ற வேண்டும்'' என்று கூறிக்கொண்டு இந்திய இராணுவம் கடந்த மார்ச் 8-ந் தேதியிலிருந்து ஷார்-இ-ஷெரீப் நகரை முற்றுகையிட்டு ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. நகரின் குடிநீர் மற்றும் மின்சார இணைப்புகளைத் துண்டித்தும், மசூதி அருகே குண்டு வெடிப்புகளை நடத்தி மக்களை பயபீதியூட்டி கட்டாயமாக வெளியேற்றியும் குடியிருப்புப் பகுதிகளையே தமது முகாம்களாக மாற்றிக் கொண்டுள்ளது. முன்பு ஹஸ்ரத்பால் மசூதியை முற்றுகையிட்டதைப் போலவே, இப்போது ஷார்-இ-ஷெரீப் மசூதியையும் முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தும் ஏற்பாடுதான் இது.

இந்திய அரசு பயங்கரவாதிகளின் இம்முற்றுகை நடவடிக்கையை எதிர்த்து, அனைத்துக் கட்சி ஹரியத் அமைப்பின் சார்பில் கடந்த மார்ச் 15-ந் தேதி காஷ்மீர் மாநிலம் முழுவதும் கடையடைப்புப் போராட்டம் நடந்தது. ஆயினும் இந்திய இராணுவம் தனது முற்றுகையை விலக்கிக் கொள்ளாததோடு, பதுங்கு குழிகளை அமைத்துப் போர்த் தாக்குதலுக்கான தயாரிப்புகளில் இறங்கியது. மசூதியில் சிக்கியுள்ள போராளிகள் மற்றும் தொழுகைக்கு வந்த பொதுமக்களுக்கு உணவும் குடிநீரும் கொண்டு செல்லக்கூட விடாமல் இராணுவம் அடாவடித்தனம் செய்து வருகிறது.

இக்காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்து ஹரியத் அமைப்பின் தலைவர்கள் அண்மையில் டெல்லியில் பத்திரிகையாளர்களைக் கூட்டி, இந்திய இராணுவத்தின் சூழ்ச்சிகள்-சதிகளை அம்பலப்படுத்தியுள்ளனர். முற்றுகையை நிபந்தனையின்றி விலக்கிக் கொள்ளாவிட்டால், மசூதியை விடுவிக்கும் போராட்டத்தை மேற்கொள்வோம் என்றும் எச்சரித்துள்ளனர். ''தேர்தல் மோசடிகளுக்கு நாங்கள் இரையாகமாட்டோம்; காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைப் போரைக் கைவிடவும் மாட்டோம்'' என்று இந்திய ஆட்சியாளர்களின் முகத்தில் அவர்கள் கரிபூசியுள்ளனர்.

**ஷார் - இ - ஷெரீப் மசூதியை இந்திய ராணுவம் முற்றுகையிட்டுள்ளதைத் தொடர்ந்து பீதியுடன் அந்நகரை விட்டு வெளியேறும் காஷ்மீரி மக்கள்**



## பம்பாயில் பாசிச - இனவெறிக் குரங்குகளின் கொட்டம்

மகாராஷ்டிராவில் ஆட்சியைப் பிடித்துள்ள சிவசேனா - பாரதீய ஜனதா கூட்டணி, பதவிக்கு வந்தவுடனேயே தனது இனவெறி - பாசிச கோர முகத்தை வெளிக்காட்டி விட்டது. இக்கூட்டணி அரசின் பதவியேற்பு விழா முடிந்தவுடன் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தலைநகர் பம்பாயை, ''மும்பாய்'' எனப் பெயர் மாற்றம் செய்வதென்றும், பயங்கரவாத ''தடா'' சட்டத்தைத் தொடருவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதோடு பம்பாய் நகருக்குள் பிற மாநிலத்தவர் நுழைவதற்குத் தடைவிதித்து, ''பெர்மிட்'' முறையைக் கொண்டு வரவும் இப்பாசிச இனவெறியர்கள் தீர்மானித்துள்ளனர். பம்பாய் நகரில் இனி புதிதாகக் குடியேறுபவர்களுக்கு குடும்ப அட்டைகள் தரப்பட மாட்டாது என்றும், பம்பாயில் நான்கு தலைமுறைக்கு முன்பு குடியேறிய பாகிஸ்தான் மற்றும் வங்கதேச முஸ்லிம்களை வெளியேற்றுவோம் என்றும் சிவசேனா முதல்வர் மனோகர் ஜோஷி கொக்கரித்துள்ளார்.

பம்பாயில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களைச் சாக்காக வைத்து முஸ்லிம் சிறுபான்மையினர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியும், பம்பாயின் சினிமா, ரகசிய உலகத்தின் மீது தமது ஆதிக்கத்தை நிறுவ பயங்கரவாதப் பீதியூட்டியும் வந்த சிவசேனா இப்போது ஆட்சியைப் பிடித்துவிட்ட திமிரில், கள் குடித்த குரங்காக ஆட்டம் போடக் கிளம்பிவிட்டது. முஸ்லீம்களின் கட்டிடங்கள் - சொத்துக்களை அரசு விதிமுறைகளை மீறியதாகவும், ரகசிய உலகப் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையதாகவும் கூறி கைப்பற்றுவது அல்லது இடித்துத் தள்ளுவது; புறம்போக்கு சேரிப் பகுதிகளில் வாழும் முஸ்லீம்களை விரட்டிவிட்டு அந்நிலத்தை ''ரியல் எஸ்டேட்'' மாஃபியாக்களுக்குத் தாரைவார்ப்பது; பிழைப்புக்காக பம்பாயில் குடியேறிய தமிழர், கன்னடியர் மற்றும் ஒரிசா மாநில விசைத்தறி தொழிலாளர்களை ஊரைவிட்டு விரட்டுவோம் என்று மிரட்டிப் பணிய வைத்து அவர்களைத் தமது ஓட்டு வங்கிகளாக மாற்றுவது; பாசிச ஜெயா பாணியில் ஆட்சியதிகாரம் மற்றும் குண்டர் படைத் தாக்குதலைக் காட்டி முஸ்லீம்கள், பிற மாநிலத்தவரிடம் ''சூட்கேஸ்'' வாங்குவது முதலான நோக்கங்களுடன்தான் சிவசேனா - பாரதீய ஜனதா கூட்டணி ஆட்சி கிளம்பியிருக்கிறது.

மராட்டிய அரசின் இம் முடிவை எதிர்த்தும், நாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று குடியேறவும், தொழில் நடத்தவும் குடிமக்களுக்கு சட்டப்படி உரிமை உள்ளதைக் காட்டியும் நாடாளுமன்றத்தில் காங்கிரசு மற்றும் எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்த பிறகு, மராட்டிய முதல்வர் ஜோஷி அப்படி எந்த முடிவும் இப்போதைக்கு இல்லை என்று கூறியுள்ளார். கூட்டணிக் கட்சியான பாரதீய ஜனதா தாங்கள் இத்தகைய முடிவை ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம் என்று மழுப்புகிறது. ஆனால் சிவசேனா தலைவர் பால்தாக்கரே, ''பம்பாய் தர்மசத்திரமல்ல!'' என்று தனது இனவெறிக்கு மறைமுகமாக வக்காலத்து வாங்குகிறார். எனவே அரசுரீதியாக அல்லாமல், தமது பாசிச குண்டர் படை மூலம் இம்முடிவை இனவெறியர்கள் சாதிக்க முயற்சிப்பார்கள் என்பதையே நிலைமைகள் உணர்த்துகின்றன.

www.padippakam.com

# பங்காளியின் வருகை பாசிஸ்டுகளின் பூரிப்பு

ரஷியாவின் நவீன நாஜியும், பாசிச எதிர்க்கட்சித் தலைவருமான ஜிரினோவ்ஸ்கி இந்தியாவுக்கு வருகை தந்ததையொட்டி இந்தியப் பாசிஸ்டுகள் அகமகிழ்ந்து போயுள்ளார்கள். தமது அகண்ட பாரத நோக்கங்களை ஆதரித்துப் பேசிய ஜிரினோவ்ஸ்கியை ரகசியமாகப் பாராட்டிப் பூரித்துப் போகிறார்கள்.

யார் இந்த ஜிரினோவ்ஸ்கி? கடந்த ரஷ்யத் தேர்தலில் 25% வாக்குளைப் பெற்று வலுவான பாசிச எதிர்க்கட்சியாக வளர்ந்து வரும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர்தான் ஜிரினோவ்ஸ்கி. இட்லரைப் போலவே பாசிச வக்கிரமும் கோமாளித்தனமும் கொண்டவர். பிரிந்து சென்ற ரஷிய தேசிய இனக் குடியரசுகளை வலுக்கட்டாயமாக மீண்டும் சேர்த்து ரஷியாவை வல்லரசு நாடாக்க வேண்டும்; ரஷிய விவகாரங்களில் எந்த நாடு தலையிட்டாலும் அணு ஆயுதப் போரை நடத்த வேண்டும் என்று தேசிய வெறி - போர் வெறியூட்டி வருபவர். ரஷியாவின் சர்வாதிகார அதிபர் யெல்ட்சினது அரசியல் - பொருளாதாரக் கொள்கைகளின் தோல்வியைச் சாதகமாக்கிக் கொண்டு கவர்ச்சிவாத அரசியலுடன் பாசிசக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்து கொண்டு அச்சுறுத்தும் புதிய பாசிஸ்டாக வளர்ந்து வருபவர்.

அடுத்து வரும் ரஷிய அதிபர் தேர்தலில் போட்டியிட்டால் ஜிரினோவ்ஸ்கிதான் வெற்றி பெறும் வாய்ப்புள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் மதிப்பிடுகின்றனர். ரஷிய அதிபர் யெல்ட்சின் கும்பலை முட்டுக் கொடுத்து ஆதரித்து வரும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் போர் வெறி பிடித்தலையும் பாசிச ஜிரினோவ்ஸ்கியின் வளர்ச்சியைக் கண்டு பீதியடைகின்றனர். கிரிமினல்கள், மாஃபியாக்கள், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் மேட்டுக்குடி இளைஞர்களை தமது சமூக அடித்தளமாகக் கொண்டுள்ள ஜிரினோவ்ஸ்கியின் நவீன நாஜிக் கட்சியினர் நடத்தி வரும் இனவெறி பாசிசத் தாக்குதல்களைக் கண்டு ரஷிய நாடே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. அவரது இனவெறியூட்டும் பிரச்சாரத்தால் அத்திரமடைந்துள்ள யூதர்களும் முஸ்லீம்களும் மேலை நாடுகளில் அவருக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

அண்மையில் இந்தியாவுக்கு வந்த ஜிரினோவ்ஸ்கி தனது பாசிச வெறியை வெளிப்படையாக்வே கக்கியுள்ளார். "இந்தியாவை வல்லரசு நாடாகக் காண விரும்புகிறேன். இந்தியாவிலிருந்து பாகிஸ்தானும் பூடானும் வங்கதேசமும் செயற்கையாகப் பிரிக்கப்பட்டு விட்டன. அவை மீண்டும் தமது தாய்நாடான இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும். இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே பொதுவான எல்லைப் பகுதியை உருவாக்க வேண்டும். ரஷ்யாவிலிருந்து ஆப்கான் வழியே நேரடி தரைவழிப் போக்குவரத்துப் பாதையை நிறுவ வேண்டும். எனது ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு விரோதமான எந்த நாட்டுக்கும் ஆயுத உதவி செய்ய மாட்டேன். பாகிஸ்தான் போர் தொடுத்தால் இந்தியாவுக்கு எல்லா வகையிலும் ஆயுத உதவி செய்வேன். ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் இந்தியாவை நிரந்தர உறுப்பு நாடாக்க முயற்சிப்பேன். இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்காவின் ஆதிக்கத்தைத் தடுக்க ரஷ்யக் கடற்படையை நிறுத்துவேன்" என்று பேட்டியளித்துள்ளார் அவர்.

அமெரிக்காவுடனான ஆதிக்கப் போட்டியில் தற்காலிகமாகப் பின்னடைந்துவிட்ட ரஷ்யாவை மீண்டும் மேலாதிக்க வல்லரசாக மாற்றவும் இந்தியாவை அதன் துணைக் கோளாக்கிக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுதான் அவர் இவ்வாறு கூறியுள்ளார். குறிப்பாக, இந்துவெறி பாசிஸ்டுகளைத் தனது பங்காளிகளாக்கிக் கொள்ள விரும்புகிறார். எனவேதான் காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரித்தும் இந்தியா - ரஷியா ஆகிய இரு நாடுகளுக்கும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் பாரதீய ஜனதாவுடன் தான் கட்சி அடிப்படையில் உறவு கொள்ள விரும்புவதாகவும் கூறியுள்ளார். தலைமைத் தேர்தல் ஆணையாளர் சேஷனைப் பாராட்டியதோடு, ரஷியத் தேர்தலில் அவரது சேவையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவதாகவும் அவர் பேட்டியளித்துள்ளார். பாசிஸ்டுகளுக்கே உரித்தான கவர்ச்சிவாத கோமாளித்தனங்களையும் அவர் விட்டு வைக்கவில்லை. டெல்லியிலே ராகேஷ் என்ற சிறுவனுக்கு முத்தம் கொடுத்து, ராணுவத் தொப்பியை அணிவித்து மகிழ்ந்து, ரஷியாவுக்கு வருமாறும் அழைத்துள்ளார்.

தமது அகண்ட பாரதக் கனவைப் பிரதிபலித்த ஜிரினோவ்ஸ்கியை இந்து வெறி பாசிஸ்டுகள் பாராட்டி அகமகிழ்ந்து போயுள்ளார்கள். சர்வதேச அரங்கில் தமது இந்து வெறி பாசிசத்தை நியாயப்படுத்த இன்னுமொரு வாய்ப்பு கிடைத்துள்ளதை எண்ணி பூரித்துப் போகிறார்கள். காங்கிரசு பாசிஸ்டுகளின் நோக்கமும் இதிலிருந்து மாறுபட்டதல்ல. எனினும் வெளிப்படையாக ஜிரினோவ்ஸ்கியை ஆதரித்து அம்பலப்படாதிருக்கவும், அமெரிக்க மாமா கோபித்துக் கொள்வாரே என்ற அச்சம் காரணமாகவும் அரசு ரீதியாக அவருக்கு வரவேற்பு அளிக்காமல், கலாச்சார உறவுக் கவுன்சில் மூலம் மத்திய அரசு வரவேற்று கௌரவித்துள்ளது. பாரதீய ஜனதா தலைவர் வாஜ்பாயும், வெளியுறவு ராஜாங்க அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் தனித்தனியே அவருக்கு விருந்தளித்து உபசரித்துள்ளனர். ஆயினும் எவருமே ஜிரினோவ்ஸ்கியின் இனவெறி - பாசிசப் பிதற்றல்களை விமர்சிக்கவே இல்லை. அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்க தேசம் ஆகியவற்றின் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் கேள்விக்குள்ளாக்கிய அவரது மேலாதிக்க வெறியை எதிர்க்கவுமில்லை. தமது பாசிசப் பங்காளி என்பதால் மௌனம் சாதிப்பதன் மூலம் இவற்றை நியாயப்படுத்துகின்றனர். உலகெங்கும் அம்பலப்பட்டு வரும் பாசிசப் பைத்தியக்காரனுக்கு தமது கோவணத்தை அவிழ்த்து தலைப்பாகை கட்டி கௌரவிக்கும் இந்தியப் பாசிஸ்டுகள் அம்மணமாகி நிற்கின்றனர்.

● குமார்

ஜிரினோவ்ஸ்கியை வரவேற்று விருந்தளிக்கும் வாஜ்பாய்





படிப்பகம்

www.padippakam.com

## பட்ஜெட்:

# கஞ்சிக்கு வழியில்லாதவனிடம் ‘கலர் சினிமா’ காட்டும் வக்கிரம்

கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன் வானமேறி வைகுந்தம் போன கதையைக்கூட நம்பிவிடலாம். நாட்டைத் தவணை முறையில் ஏகாதிபத்தியங்களிடம் மறுஅடகு வைத்துவிட்ட நிதியமைச்சர், தற்போதைய பட்ஜெட்டின் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளார் என்பதைக் காங்கிரசு முட்டாள்கூட நம்பமாட்டான். ஆனாலும் யாமிருக்க பயமேன் என்று ஏகாதிபத்தியங்களும் தரகுப் பெருமுதலாளிகளும் ஆதரவளிக்கும் தைரியத்தில் ஜனரஞ்சகத் தோற்றமளிக்கும் நயவஞ்சக பட்ஜெட்டை மன்மோகன் சிங் சமர்ப்பித்துள்ளார்.

இந்திய நாட்டில் ஒரே நிதி மந்திரி 5-வது முறையாக வரவு - செலவுத் திட்டம் போடுவது ஒரு பெரிய சாதனையாம். அந்த வகையில் இது சாதனைதான். மற்றபடி பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே இருக்கும்போது வரும் இந்த வரவு - செலவு திட்டத்தில் உழைக்கும் மக்களுக்கு நிறையவே சலுகைகள் இருக்கும் என்று கூறப்பட்டது. ஆனால் அப்படிப்பட்ட திட்டம் ஒன்றுமே கிடையாது. வெறும் கவர்ச்சிமுலாம் பூசப்பட்ட, உலக வங்கி - சர்வதேச நிதி நிறுவனம் விதித்துள்ள கட்டுமான சீரமைப்புக் கொள்கை அடிப்படையிலான பழைய மக்கள் விரோத பொருளாதார போக்கின் தொடர்ச்சியாகவே இந்த பட்ஜெட்டும் உள்ளது.

அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு இந்தியச் சந்தையைத் திறந்துவிட்டு, 50%-க்கும் மேலாக இறக்குமதித் தீர்வையைக் குறைத்தும் சுங்கத் தீர்வையை அற்பமாக்கியும் தாராள சலுகைகள் வாரியிறைக்கப்பட்டுள்ளன. நைலான், பாலியஸ்டர் இழை தயாரிப்பிற்கான கச்சாப்பொருட்களின் இறக்குமதி தீர்வைக் குறைப்பு, மின்னணுப் பொருட்களுக்கு 15% வரி குறைப்பு, இயந்திர சாதனங்களுக்கான இறக்குமதித் தீர்வை குறைப்பு, நேர்த்தியான தோல் பொருட்களின் ஏற்றுமதிக்கு முற்றாக தீர்வை ரத்து, கோழிப்பண்ணை, இறால் பண்ணைகளுக்கான குஞ்சுகள் - தீவனங்கள் இறக்குமதிக்கு வரிகுறைப்பு, மேட்டுக்குடி - மேல்தட்டு நடுத்தர வர்க்கத்தினரின் நுகர்பொருட்களான பழக்கூழ், வெண்ணெய், ரொட்டி, எவர்சில்வர் பாத்திரங்கள் முதலானவற்றுக்கு ஆயத்தீர்வை வரிக்குறைப்பு என தரகுப் பெரு முதலாளிகளுக்குக் கணக்கற்ற சலுகைகளை அள்ளிக் கொடுத்துள்ளார் நிதியமைச்சர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அடிக்கட்டுமான - சேவைத் துறைகளை முற்றாக ஏகாதிபத்தியங்களுக்கும் தனியார் தரகுப் பெருமுதலாளிகளுக்கும் திறந்துவிடும் நோக்கத்தோடு தற்போதைய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. சாலைகள், போக்குவரத்து, தொலைத் தொடர்பு, துறைமுகங்கள் முதலான துறைகளில் தனியார் முதலீடு செய்தால் முற்றாக வரி விடுமுறையும் சலுகைகளும் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து மலிவான உழைப்புச் சக்தியையும், உற்பத்திப் பொருட்களையும் கொள்ளையடித்துச் செல்வதற்கு வசதியாக அடிக்கட்டுமான - சேவைத் துறைகளை நவீனப்படுத்துமாறு ஏகாதிபத்தியங்கள் நிர்பந்திக்கின்றன. அவற்றின் கட்டளைப்படியே பட்ஜெட்டில் இத்துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சேவைத் துறைகளில் அரசு முதலீட்டைக் குறைத்து, அனைத்திலும் அன்னிய ஏகாதிபத்தியங்களின் இரும்புப் பிடியில் தள்ளிவிடும் அயோக்கியத் தனமான நடவடிக்கைதான் இது.

அதேசமயம் அரிசி, பருப்பு முதலான அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த பட்ஜெட்டில் எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை. இரட்டை இலக்கமாக உயர்ந்துவிட்ட பணவீக்கத்தைக் குறைக்க பட்ஜெட்டில் எந்த நடவடிக்கையுமில்லை. இதன் விளைவாக விலைவாசிகள் தாறுமாறாக உயர்ந்து, அச்சுமை முழுவதும் உழைக்கும் மக்களின் தலையிலேயே சுமத்தப்படும்.

இறக்குமதி தீர்வை - சுங்கவரி குறைப்பு, மற்றும் பிற சலுகைகளினால் அன்னிய தனியார் முதலீடும் உற்பத்தியும் பெருகி அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறையும் என்று முதலாளித்துவ பொருளாதாரவாதிகள் காதில் பூச் சுற்றுகிறார்கள். கடந்த நான்காண்டுகளாக இதேபோல் வரிச்சலுகைகள் அறிவிக்கப்பட்ட போதிலும் உற்பத்தி பெருகவில்லை; விலைவாசியும் குறையவில்லை. இறக்குமதித் தீர்வைக் குறைப்பினால் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விலைகள் குறையும் என்று நடுத்தர வர்க்கத்தினரை ஆசைகாட்டி ஏய்க்கும் இவர்கள், கடந்த நான்காண்டுகளில் விலைகள் எவ்வளவு குறைந்தது என்று சொல்லட்டும். மேலும் இந்த வரிச் சலுகைகள் நாட்டின் கோடானுகோடி மக்கள் ஈடுபட்டுள்ள விவசாயத்தையும் அதைச் சார்ந்த தொழில்களுக்கும் அல்லாமல், ஏகாதிபத்தியங்களின் - தரகுமுதலாளிகளின் தொழில்களுக்குத்தான் தரப்பட்டுள்ளது. அதிலும்கூட, கண்ணாடி தோட்டிக்குள் வண்ணமீன்களை வளர்த்து அழகு பார்ப்பது போல, ஏற்றுமதி அடிப்படையிலான தொழில்களுக்கும் ஆடம்பர நுகர்பொருள் உற்பத்திக்கும்தான் இச்சலுகைகள் தரப்பட்டுள்ளன. இவற்றால் நாட்டின் உற்பத்தி ஒருபோதும் வளர்ச்சியடையாது; விலைவாசியும் குறையாது.

> அடிக்கட்டுமான - சேவைத் துறைகளை முற்றாக ஏகாதிபத்தியங்களுக்கும் தனியார் தரகுப் பெரு முதலாளிகளுக்கும் திறந்துவிடும் நோக்கத்தோடு தற்போதைய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது

ஏற்கனவே 4 மாநிலங்களில் வறுமையும் பட்டினிச் சாவுகளும் நிரந்தரமாகிவிட்ட நிலையில் அதை நாடெங்கும் விரிவுபடுத்தும் வகையிலேதான் ஆட்சியாளர்களின் பட்ஜெட் திட்டங்கள் அமைந்துள்ளன. கிராமப்புற மேம்பாட்டுக்காக கடந்த ஆண்டைவிட மூன்றில் ஒரு பங்கு அதிகமாக - அதாவது ரூ 7700 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலே பெரும்பகுதி தொகையானது அதிகாரிகள், அரசியல்வாதிகள், ஒப்பந்தக்காரர்கள் கொள்ளையிடும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்துக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினருக்கு 10 லட்சம் வீடுகள், வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள வயதானவர்களுக்கு ஓய்வூதியம், மகளிருக்கு மகப்பேறுகால சலுகைகள், குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம், 129 கோடி மனித வேலை நாட்களுக்கு கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பளித்தல் முதலான கவர்ச்சித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காட்டி கிராமப்புற நலனில் அக்கறை கொண்ட பட்ஜெட் என்று ஆட்சியாளர்கள் பீற்றிக் கொள்கின்றனர்.

ஆனால் பட்ஜெட்டில் இத்திட்டங்களுக்குச் சிறப்பு ஒதுக்கீடு எதுவுமே இல்லை. 1991 தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்த மதிய உணவுத் திட்



படிப்பகம்

www.padippakam.com

டத்தை இப்போது நிறைவேற்றப் போகிறார்களாம். இத்திட்டத்திற்கு தானியக் களஞ்சியங்களில் சேமிப்பில் உபரியாக உள்ள தானியம் ஒதுக்கப்படும் என்று தான் நிதியமைச்சர் கூறியுள்ளார். அதாவது நல்ல விளைச்சலும் உபரியாக சேமிப்பும் இருந்தால்தான் இத்திட்டம் சாத்தியமாகும்; நல்ல விளைச்சல் இல்லாவிட்டால் திட்டம் அதோகதிதான்.

இதேபோல, தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களுக்கு 10 லட்சம் வீடுகள் கட்டித்தரும் திட்டத்திற்கும் பட்ஜெட்டில் ஒதுக்கீடு எதுவுமில்லை. ''இந்திரா ஆவாஸ் யோஜ்னா'' (IAY) திட்டத்தின் மூலம் இது நிறைவேற்றப்படும் என்கிறார் நிதியமைச்சர். ஆனால், ஜவஹர் ரோஜ்கார் யோஜ்னா (JRY) திட்டத்தின் துணைத்திட்டம்தான் இந்திரா ஆவாஸ் யோஜ்னா. கடந்த ஆண்டில் ஜவஹர் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 10% தொகைதான் இந்திரா திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டில் 20% நிதி ஒதுக்கி வீடுகள் கட்டும் திட்டம் தொடங்கப்படும் என்று நிதியமைச்சகம் கூறுகிறது. 10 லட்சம் வீடுகள் கட்டக் குறைந்தபட்சம் 1000 கோடி ரூபாயாவது தேவை. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டிருப்பது ரூ.3862 கோடி. இதில் 20% தொகை என்பது ஏறத்தாழ ரூ.750 கோடிதான்! இதில் இத்திட்டத்திற்கான அரசு ஊழியர்களின் ஊதியம் மற்றும் நிர்வாகச் செலவுக்கே பாதிக்கும் மேற்பட்ட தொகை போய்விடும். பீகார், ஒரிசா மாநிலங்களில் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் கடந்த ஆண்டில் ஊழியர்களுக்கான ஊதியமாகக் கரைந்துவிட்டது என்று திட்டக் கமிஷன் அறிக்கைகளே ஒப்புக் கொள்கின்றன. இந்த லட்சணத்தில், வீடு கட்டும் திட்டம் என்பது குட்டிச் சுவராகத்தான் நிற்க முடியும்.

அடுத்து, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களுக்கு நடப்பாண்டில் 129 கோடி மனித நாட்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று நிதியமைச்சர் கயிறு திரிக்கின்றார். நாட்டிலே முறையான வேலை ஏதுமின்றி 10 கோடிப் பேர் வறுமையில் உழல்வதாக அரசாங்கப் புள்ளி விபரங்களே ஒப்புக் கொள்கின்றன. இவர்களுக்கு ஓராண்டில் 15 நாட்களுக்கு வேலை வாய்ப்பளிப்பது என்றாலே 150 கோடி மனிதவேலை நாட்கள் ஆகிறது. இதுதவிர ஆண்டுதோறும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் லட்சக்கணக்கான விவசாயிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால் 10 நாட்களுக்குக் கூட வறட்சி நிவாரண வேலைகள் கிடைக்காது. மேலும், ஆலைகளை நவீனப்படுத்துவது என்ற பெயரில் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்து கொள்ள தாராள சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளதால், நவீன எந்திரங்களின் பெருக்கத்தால் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாப் பட்டாளத்தில் சேருவார்கள். மேலும், விவசாயத்துக்கு அடுத்த மிகப் பெரிய உற்பத்தித் துறையான கைத்தறி நெசவுத் துறையை முற்றாகப் புறக்கணித்து விட்டு, ஏகாதிபத்தியங்களிடமிருந்து பாலியஸ்டர் நூலிழைகளை இறக்குமதி செய்து கொள்ள ஏராளமான சலுகைகளை நிதியமைச்சர் அள்ளிக் கொடுத்துள்ளார். இதன் விளைவாக, கைத்தறி நெசவுத்துறை முற்றாக முடக்கப்பட்டு, கோடிக்கணக்கான நெசவாளர்கள் பட்டினிப் பட்டாளத்தில் தள்ளப்படுவர். இவர்களையும் சேர்த்துக் கணக்கிட்டால் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான ஒதுக்கீடு மிக அற்பமானது என்ற உண்மை தெரியவரும்.

# மந்திரமா? தந்திரமா?




இப்படி நாட்டின் கோடானுகோடி மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு வரியைக் குறைத்து வக்கிரமாக ஆடுகிறது காங்கிரசு அரசு. குளிர்பானங்கள், அழகு சாதனங்கள், ஒலி - ஒளி நாடாக்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மின்னணுச் சாதனங்கள் முதலான ஆடம்பர நுகர் பொருட்கள் மீது சற்றே வரிக்குறைப்பு செய்துவிட்டு, அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைத்துவிட்டதாக காங்கிரசுக் கோமாளிகள் குதிக்கின்றனர். கும்பி கூழுக்கு அழும் போது இப்பாசிசப் பைத்தியக்காரர்கள் கொண்டைக்குப் பூவைக்கக் கிளம்பியுள்ளனர்.

பாமர மக்களைப் பட்டினிக்குத் தள்ளியது போதாதென்று, நடுத்தர மக்களிடம் ஆடம்பர நுகர்பொருள் மோகத்தை ஊட்டிக் கொள்ளையிடுவது; அதே சமயம் அவர்களின் ஓட்டுக்களைக் குறிவைப்பது என்ற இரட்டை நோக்கத்துடனேயே இச்சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நடுத்தர வர்க்கத்தினரிடம் எஞ்சியுள்ள அற்ப சேமிப்பையும் பறித்துக் கொண்டு தரகுப் பெருமுதலாளிகளின் சந்தை மேலும் விரிவடைய வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அன்னிய நுகர்பொருள் மோகம், ஐந்து நட்சத்திர கலாச்சாரம், மேலைநாட்டுப் பாணியில் சீரழிவு எனும் திசையில் நாட்டையும் மக்களையும் இழுத்துச் செல்வதே காங்கிரசு துரோகிகளின் நோக்கமாக உள்ளது.

வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளதாக கூறப்படும் பட்ஜெட்டில் இந்த ஆண்டிலும் பற்றாக்குறை ரூ.5000 கோடிக்கு அதிகரித்துள்ளது. நிதிப்பற்றாக்குறையோ ரூ.57,634 கோடியாக பெருத்துவிட்டது. இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 3 லட்சம் கோடி ரூபாயை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு வட்டி கட்டவே பட்ஜெட்டில் கால் பங்கிற்கு மேலான தொகை போய்விடுகிறது. உலகின் மிகப்பெரிய கடனாளி நாடுகளான பிரேசில், மெக்சிகோவை அடுத்து மூன்றாவது இடத்துக்கு இந்தியா முன்னேறிவிட்டது. மீண்டும் உலக வங்கிக்குக் கட்ட வேண்டிய கடனும் வட்டியும், கூடவே 11% அளவுக்கு உயர்ந்துவிட்ட பணவீக்கமும் சேர்ந்து நாட்டை திவாலாக்கப் போவது நிச்சயமாகிவிட்டது.

நாட்டை மறுஅடகு வைக்கும் இப்புதிய பொருளாதாரக் கொள்கைகளை மூடிமறைக்கவும், மக்களிடம் செல்லாக் காசாகிவிட்ட காங்கிரசின் செல்வாக்கைத் தூக்கி நிறுத்தவும், தேர்தலில் பட்ஜெட்டைக் காட்டி ஏய்க்கவும்தான் தற்போதைய பட்ஜெட்டைக் கவர்ச்சிவாதப் பாணியில் காங்கிரசுப் பெருச்சாளிகள் தயாரித்துள்ளனர். ஆனால் இப்பொருளாதாரக் கொள்கைகளை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளிடம் இதற்கு மாறான கொள்கைகளோ, திட்டங்களோ கிடையாது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு காங்கிரசார் கஞ்சிக்கு வழியில்லாதவனிடம் ''கலர்'' சினிமா காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

● மனோகரன்


படிப்பகம்

www.padippakam.com

# அவல நிலையில் உலக நெருக்கடி

**வறுமை, வேலையில்லாமை, சமுதாயச் சிதைவு. இவை கடந்த மார்ச் 6 முதல் 12 தேதி வரை டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் நடந்து முடிந்த சமுதாய மாநாட்டில் விவாதிக்கப்பட்ட மூன்று முக்கிய கருத்துக்கள். ஐக்கிய நாடுகள் சபையின் கருத்துப்படி இவை இன்றைய காலத்தின் மையமான சமூகப் பிரச்சினைகளில் சிலவாகும். உலகப் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டிருந்தாலும் இப்பிரச்சினைகள் நெருக்கடியின் அளவை அடைந்துள்ளன. இம்மூன்று சமூகப் பிரச்சினைகளின் சில அடிப்படை உண்மை விவரங்களை இங்கே தருகிறோம். இவை, நடந்து முடிந்த சமுதாய மாநாட்டில் பங்கேற்றவர்களுக்காக ஐ.நா. சபை செயலகம் தயாரித்தவை.**

## வறுமை

### இன்றைய நிலைமை

அடிப்படை விவரங்கள்: 1994 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த பூமியில் வாழ்வோர் 560 கோடிப்பேர், இவர்களில் 100 கோடிப் பேருக்கு மேல் பூரண வறுமையில் வாழுகின்றனர்; இவர்களின் வருவாய், நுகர்வு மட்டங்கள் அந்தந்த தேசங்களால் வரையறுக்கப்பட்ட வறுமைக் கோடுகளுக்குக் கீழே உள்ளன.

இவர்கள் வாழ்வின் அடிப்படைத் தேவைகள் அறவே பறிக்கப்பட்டு ஆண்டுக்கு 370 டாலருக்கும் (ஏறத்தாழ ரூ. 11,000) குறைவான வருவாயைக் கொண்டு உயிர் வாழப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

சுமார் 55 கோடிப்பேர் ஒவ்வொரு இரவும் பட்டினியோடு படுக்கையில் தள்ளப்படுகின்றனர். 150 கோடிப் பேருக்கும் மேலாக சுத்தமான குடிநீரும், கழிவு வசதிகளும் இல்லாமல் தவிக்கின்றனர்.

நோய் நொடிகள், பட்டினி, சத்துணவுக் குறைவு, கிரிமினல் குற்றங்கள் போன்றவற்றின் விளைவாக இவர்களது சராசரி வாழும் வயதும் குறைவாகவே உள்ளது. ஆஃப்ரிக்காவின் சகாரா பாலைவனத்தை ஒட்டிய பகுதிகளில் சராசரி 50 வயதுக்கு மேல் அரிதாகவே மக்கள் பிழைத்திருக்கின்றனர். ஒப்பளவில் ஜப்பானில் சராசரி வாழும் வயது 80.

கல்வி என்பது துளியும் கிடையாது. முதியோரில் 100 கோடிப் பேருக்கு மேல் தற்குறிகளாகவே உள்ளனர்; அதே சமயம் 50 கோடி சிறுவர் - சிறுமியர் எங்கேயும் பள்ளி செல்வதே கிடையாது.

**யார்?**

ஏழைகள் என்பவர் யதார்த்தமாக ஒவ்வொரு நாட்டிலும் தான் உள்ளனர்; ஆனால் வளரும் நாடுகளில் மிகப்பெரும்பான்மையினர் வாழுகின்றனர்.

தமது விகித அளவுக்குமேல் பெண்கள்தான் அல்லல்படுகின்றனர். வறுமை பீடித்த மக்கள் தொகையில் 70 சதவீதம் பேர் பெண்கள்; அடுத்து நெருக்கமாக வருவோர் முதியோர்.

ஆஃப்ரிக்காவில் பிழைத்திருக்கும் ஒவ்வொரு ஆயிரத்துக்கும் 175 பேர் என்று குழந்தைகள் இறப்பு விகிதம் உள்ளது; அதுவே இந்தியாவில் சுமார் 100. கிழக்கிலும் மேற்கிலும் உள்ள முன்னேறிய உலகில் சராசரி 15 தான்.

**என்ன?:**

வறுமை என்பது மிகமிகக் குறைந்த பட்சம் ஒரு நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் வாழ்வதற்குத் தேவையான அளவு வருமானம் அல்லது செலவு என்று ஒரு மாதிரிக்கு வரையறுக்கப்பட்டது. ஆனால் இதுவும் கூட, போதிய சத்துணவு, சராசரி வாழும் வயது, தூய்மையான குடிநீர், மற்றும் கழிவு வசதி, நோய், நொடி, கல்வி, மற்றும் மனிதராக வாழ்ந்திருக்கத் தேவையான பிற அம்சங்களைப் பொறுத்திருக்கிறது.

வருவாய் மட்டத்தைப் பொருத்தவரை, ஆண்டுக்கு நபர் ஒருவருக்கு 370 டாலர் என்று மேல்தட்டு வறுமைக் கோட்டை உலக வங்கி நிர்ணயித்திருக்கிறது. அதற்குக் கீழிருப்பவர்களை ஏழைகள் என்று வகைப்படுத்தியிருக்கிறது. இந்த வரையறுப்பின்படி மிகவும் ஏழை என்பவர் 275 டாலருக்கும் (ஏறத்தாழ ரூ. 8500) குறைவாக ஆண்டு வருமானம் பெறுபவர்.

**எங்கே?:**

மிகப் பெருமளவு ஏழை மக்கள் குவிந்திருப்பது, ஆசியா, ஆஃப்ரிக்காவின் கிராமப்பகுதிகளில் தாம்.

உலக மக்கள் தொகையில் 30 சதவீதத்தினர் தெற்கு ஆசியாவில் வாழுகின்றனர். இங்குதான் எண்ணிக்கைபடி, பெருமளவில் (அதாவது உலக எண்ணிக்கையில் பாதிப்பேர்) கடுமையான வறுமையில் உழல்வோர் வாழுகின்றனர்.

ஆனால் மிகக் கடும் வறுமையில் உழல்வோரில் மிகப் பெருமளவு குவிந்திருப்பது ஆஃப்ரிக்காவில், குறிப்பாக சகாரா பாலைவனத்தை ஒட்டிய தேசங்களில்தான். உலகின் ஏழைமக்களின் 16 சதவீதத்தினரே ஆஃப்ரிக்காவில் வாழ்ந்தபோதும் அவர்களில் பாதிப்பேருக்கு மேல் வறுமையில் தவிப்பவர்கள்.

நகர்ப்புற வறுமை தொடர்ந்து மோசமடைந்து வந்தபோதும், வளரும் நாடுகளில் வாழும் ஏழைமக்களின் மொத்த எண்ணிக்கையில் இன்னும் 80 சதவீதமானவர் கிராமப்புற ஏழைகள்தாம். ஆசியாவின் 31 சதவீத கிராம மக்களோடு சகாராவை ஒட்டிய ஆஃப்ரிக்காவின் மக்கள் தொகையில் 80 சதவீதமானவர்கள் வறுமையில் வாழுகின்றனர். தென் அமெரிக்க, மத்திய அமெரிக்க தேசியக் கணக்கெடுப்புகளின்படி அங்கு 61 சதவீதமானவர் ஏழைகளாகும்.

ஆனால் முன்னேறிய நாடுகளிலும் கூட வறுமை பெருகத் தொடங்கிவிட்டது. அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் மக்கள் தொகையில் 15 சதவீதமானவர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழுகின்றனர்.

**போக்குகள்**

உலகில் ஒட்டுமொத்த வாழ்க்கை நிலைமைகள் முன்னேற்றமடைந்தாலும் வறுமையும் ஏற்றத்தாழ்வும் நீடிக்கின்றன; அவை மேலும் மோசமடைவது தெரிகிறது.

இப்போதைய போக்குகள் நீடித்தால், இந்த நூற்றாண்டின் இறுதியில் வளரும் நாடுகளில் மட்டும் ஏழை மக்களின் எண்ணிக்கை மேலும் 20 கோடியாக வெடிக்கும் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.

இது, வறுமை என்பது தனிநபரது தீவினை மற்றும் திறமைக் குறைவுகளின் ஒரு விளைவு மட்டுமல்ல; வருவாயைப் பங்கீடு செய்வதைத் தீர்மானிக்கும் கட்டமைப்பு மற்றும் முறைகளின் விளைவாகும் என்ற உண்மை விவரத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. இவை, கூலியையும் சம்பளத்தையும் பங்கீடு செய்வது; வெவ்வேறு வருமான மட்டங்



படிப்பகம்

www.padippakam.com

களிலும் பல்வேறு வரிகளும், பிற தீர்வைகளும் விதிப்பதால் ஏற்படும் தாக்கம்; நிலப்பங்கீடு; உற்பத்தி மூலாதாரங்கள் மீதான உடைமையும் கட்டுப்பாடும்; சந்தை மற்றும் விலை கட்டுத் திட்டங்கள் போன்றவைகள் (வறுமையையும், வருமானப் பங்கீட்டையும்) தீர்மானிக்கும் காரணிகளுள் அடங்கும்.

## வேலையில்லாமை

### இன்றைய நிலைமை

**உலக உழைப்புச் சக்தி:**

1994இல் 530 கோடியாக உள்ள உலக மொத்த மக்கள் தொகையில் 280 கோடிப்பேர் உலக உழைப்பு சக்திகளாவர்; இதில் 12 கோடிப் பேருக்கு மேல் வேலையில்லாதவர்கள் என மதிப்பிடப்படுகிறது.

**அதிகரிக்கும் வருவாய் இடைவெளி:** தொழில்மயமான நாடுகளில் ஒரு ஆண்டுக்கு சராசரி நபர்வாரி வருவாய் 20,000 டாலர் (ஏறத்தாழ ரூ. 6,00,000). இதுவே உலகின் கீழ்நிலை முன்னேறும் நாடுகளில் ஒப்பீடு செய்தால் 500 டாலர் (ஏறத்தாழ ரூ. 15,000) மட்டுமே.

வருவாய் பெறுபவர்களில் 20 சதவீத உயர்மட்டத்தினர் உலக வருவாயில் 83 சதவீதம் பெறுகின்றனர். ஆனால் கீழ்நிலையில் உள்ள 20 சதவீதத்தினர் 1.5 சதவீதம் மட்டும் பெறுகின்றனர்.

**வேலை விவரங்கள்:**

உழைக்கும் சக்திகளில் 30 சதவீதத்தினர் அதாவது 80 கோடிப்பேர், உற்பத்திபூர்வமான வேலையில் இல்லை; அதாவது அவர்கள் வீணே வேலை தேடிக் கொண்டிருக்கின்றனர் அல்லது குறைவேலையில் உள்ளனர்; இவர்கள் தமது தேவையை நிறைவு செய்யும் அளவு அனுமதிக்கப்படாத பணிகளில்தான் உள்ளனர். குறைவேலை என்ற வகையில் மட்டும் 70 கோடிப்பேர் உள்ளனர். இவர்கள் தாம் உலகின் 110 கோடி பரம ஏழைகளில் பெரும்பான்மையினராக அமைகின்றனர்.

● **தொழில்மயமான நாடுகள்:** தொழில்மயமான 24 பெரிய நாடுகளில் 10 பேருக்கு ஒருவர் வேலையற்றவர்.

● **வளரும் நாடுகளில்:** வளரும் நாடுகளின் மொத்த மக்கள் தொகையில் 60 சதவீதமானவர் கிராமப்புறங்களில் வாழுகின்றனர்; அவர்கள் தமது வாழ்க்கைக்கு முதன்மையாக விவசாயத்தையே சார்ந்துள்ளனர்.

சமீப ஆண்டுகளில் ஏற்றுமதிக்கான விளைபொருட்களின் விலைகள் கணிசமான அளவு குறைந்துவிட்டபோதும், பொருளாதாரத்தின் மிகுநிலைத்துறை என்கிற முறையில் விவசாயம்தான் உழைக்கும் சக்திகளில் பெருமளவைக் கொண்டிருக்கிறது; அதுதான் நிகர உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 40 சதவீதத்தைத் தருகிறது.

● **விளிம்பு நிலைத் தொழிலாளர்கள்:** சுமார் 30 கோடி மக்கள்; அவர்களில் பெரும்பான்மையோர் வளரும் நாடுகளின் பெண்கள்; கைக்கும் வாய்க்கும் கூட பற்றாக்குறை நிலையில் வாழுகின்றனர்; அவர்கள், சமூகப் பாதுகாப்பு, காப்பீடு, ஊனமடைந்தாலோ ஓய்வடைந்தாலோ பலனளிக்கும் திட்டங்கள் ஏதும் இல்லாத முறைசாராத் துறைகளில் வேலை செய்கிறார்கள்.

● **சர்வதேசக் குடிபெயர்தல்:** உலக உழைப்புச் சக்தியில் 1.3 சதவீதமேயான 3.35 கோடி அளவு பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள குடிபெயர்பவர்கள் குவிவதற்கு பெரிய குடியேற்ற நாடுகள் மேலும் கட்டுப்பாடுகளை இறுக்கியுள்ளனர். காரணம், இந்நாடுகளும் வேலையில்லாமை மலையென உயர்வதைக் கண்டஞ்சுகின்றன.




**கடன் நெருக்கடி:** வளரும் நாடுகளின் அந்நியக் கடன் கடந்த பத்தாண்டுகளில் ஏறக்குறைய இரண்டு மடங்காகிவிட்டது; அதாவது 1992-இல் 14 லட்சம் கோடியாகிவிட்டது; இதன் விளைவாக வளர்ச்சி உறைந்துபோய், வேலையில்லாமை அதிகரித்துவிட்டது.

**போக்குகள்**

உலகின் பெரும்பாலான பகுதிகளில் வேலையில்லாமையும், குறைவேலையும் துரித கதியில் அதிகரிக்கின்றன.

● **தொழில்மயமான நாடுகளில்:** 1994-இல் வேலையில்லாமை விகிதம் 8.6 சதவீதமாகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. மேற்கு ஐரோப்பாவில் இது 12 சதவீதமாகும் என்று எதிர்பார்க்கப்படும் அதே சமயம் கிழக்கு ஐரோப்பாவில் 15 சதவீதமாகும்.

● **ஆஃப்பிரிக்கா:** இரண்டு பத்தாண்டு காலப் பொருளாதார நெருக்கடிகளால் மிகக் கடுமையாகிவிட்ட சகாராவை ஒட்டிய ஆஃப்பிரிக்காவில் நகர்ப்புற வேலையில்லாமை விகிதம் 20 சதவீதத்தில் நிற்கிறது; அதோடு பற்றிக்கொள்ளும் பதற்றமான முறைசாராதுறை நகர உழைப்புச் சக்தியில் 60 சதவீதத்தை உள்ளடக்கியிருக்கிறது; கிராமப்புறங்களில், குறை வேலை என்பது உழைப்புச் சக்தியின் பாதிக்குமேல் பாதித்துள்ளது.

● **வட ஆஃப்பிரிக்காவும், மத்திய ஆசியாவும்:** வேலையில்லாமை 10 முதல் 20 சதவீதம் வரை போகிறது; அதில் இளைஞர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

● **தென் அமெரிக்கா:** இறுக்கமான கட்டுமான சீர்செய் கொள்கைகள் இருந்தும் 1980-இல் இருந்த அளவைப்போலவே மீண்டும் வேலையில்லாமை 7 சதவீதத்தை எட்டியுள்ளது.

● **கிழக்கு - தென்கிழக்கு ஆசியா:** உலகின் 110 கோடி ஏழை மக்களின் 50 சதவீதத்தினர் தெற்கு ஆசியாவில் வாழுகின்றனர்; அதேசமயம் மேலும் 15 சதவீதத்தினர் கிழக்கு ஆசியாவில் வாழுகின்றனர்.

### சமூக ஒழுங்கேற்றம்

### சமூக முன்னேற்ற அறிகுறி

● வளரும் நாடுகளில் வாழும் வயது சராசரியாக 1950-இல் 40 ஆண்டுகள் என்றிருந்தது. 1990-இல் 63 ஆண்டுகள் என்று அதிகரித்துள்ளது.

● ஆஃப்பிரிக்கா தவிர ஒவ்வொரு பிராந்தியத்திலும் கருத்தரிக்கும் விகிதம் குறைந்துள்ளது. இரண்டாயிரமாவது ஆண்டில் வளரும் நாடுகளின் ஆண்டுப் பிறப்பு எண்ணிக்கை சிகரத்தை எட்டும் என்று மதிப்பிடப்படுகிறது.

● சில நாடுகளில் மக்கள் தொகை அதிகரிப்பும் குழந்தைகள் சாவு உயர்வும் இருந்தபோதும், மொத்தம் உலக அளவில் குழந்தைகள் இறப்பு எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

● 1960 முதல் 1990 வரை வளரும் உலகில் கல்விக்கு ஒதுக்கப்படுவது நிகர தேசிய உற்பத்தியல் 2.2 இல் இருந்து 3.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. எல்லா பிராந்தியத்திலும் பெண்கள் கல்வி அதிகரித்துள்ளது; இது 1970-க்கும் 1990-க்கும் இடையே மிகக்குறை வளர்ச்சி நாடுகளில் இரண்டு மடங்கு அதாவது 18 சதவீதத்தில் இருந்து 36 சதவீதமாகிவிட்டது.

● பொருளாதார ரீதியில், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, வளரும் நாடுகளின் சராசரி நிகர வருமானம் இரண்டு மடங்குக்கு மேலாகிவிட்டது; 1990-இல் இருந்து உலகப் பொருளாதாரம் பின்னேற்றத்தில் இருந்து சிறுகச் சிறுக புத்துயிர் பெற்று வருகிறது. 1993-இல் ஒரு சதவீதமாக இருந்து 1992-இல் 2.2 சதவீதமாகவும் 1995-இல் 3 சதவீதமாகவும் வளர்ச்சி விகிதம் அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டில் இருந்து தெரிகிறது.

● 1987-இல் இருந்து உலக இராணுவச்

www.padippakam.com

செலவு ஆண்டுக்கு 3.6 சதவீதம் அளவுக்கு வீழ்ச்சியடைகிறது; இதன் விளைவாக கணக்குப் புத்தகப்படி ''சமாதானத்தால் அடையும் வருமான''க் கூட்டுத் தொகை 1987-க்கும் 1994-க்கும் இடையே 28,05,000 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

## சமூகச் சிதைவின் அறிகுறிகள்

**சமூக ஒதுக்குதல்**

● உலகின் மொத்த மக்கள் தொகையில் 10 சதவீதத்துக்கும் குறைவாகவே மக்கள் வாழ்க்கையை வடிவமைக்கும் அரசியல், பொருளாதாரம், சமூக, பண்பாட்டு நிறுவனங்களில் பங்கேற்கின்றனர். ஏழைகள், பெண்கள், முதியோர், சிறுபான்மையினர், கிராமப்புறக்குடிகள் ஆகியோர் பெரும்பாலும் இவற்றில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

● அரசியல் அதிகாரம் குறிப்பாக வளரும் உலகில் மையப்படுத்தப்பட்டதாக இருக்கிறது; இங்கு உள்ளூர் அரசாங்க அமைப்புகள் சராசரி 10 சதவீதமே செலவழிக்க வழங்கப்படுகின்றன.

● அமெரிக்காவில், ஓய்வூதியம் பெறும் ஒவ்வொரு முதியோருடைய நலனுக்கும் ஒதுக்கப்படும் செலவு 1989-க்கும் 1990-க்கும் இடையே 40 சதவீதம் குறைந்துள்ளது. அதே சமயம் வெள்ளையர்களை விட கறுப்பர்கள் மத்தியிலான வேலையில்லாமை விகிதம் இரண்டு மடங்காகிவிட்டது.

**பாரபட்சம்**

● உலகின் எழுத்தறிவில்லாதோரில் 66 சதவீதமும், உலகின் ஏழைகளில் 70 சதவீதமும் பெண்கள். ஆசியாவில் மட்டும் கிராமப்புற ஏழைப் பெண்களின் தொகை 37.4 கோடியாகும்; இது மேற்கு ஐரோப்பாவின் மொத்த மக்கள் தொகையைவிட அதிகம்.

● உலக மக்கள் தொகையில் இருந்து ஆண்டுக்கு ஒரு லட்சம் பெண்கள் காணாமற் போகின்றனர்; அவர்களில் பலர் தெற்கு, கிழக்கு ஆசியாவினர்; அங்கு ''அம்னியோ சென்டசிஸ்'' அல்லது ''அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனிங்'' எனப்படும் கருச்சோதனைகளுக்கு பிறகு பெண் கருக்கள் கர்ப்பத்திலேயே கலைக்கப்படுகின்றன.

● அமெரிக்கா அல்லாத உலகில் ஒரு சதவீதமே நிர்வாகத்தின் உயர் நிலையில் பெண்கள் உள்ளனர். ஆண்களுக்குச் சமமாக முதிய நிர்வாகிகளாகப் பெண்கள் உயர்வதற்கு 475 ஆண்டுகள் பிடிக்கும் என்று ஒரு ஆய்வு கணிக்கிறது.

● 70 நாடுகளில் வாழும் 30 கோடி பூர்வ குடி மக்கள் கடுமையான பாரபட்சத்தையும் வன்முறையையும் அடிக்கடி சந்திக்கிறார்கள்; சான்றாக, கனடாவில் பிற கனடியர்களைப் போல ஆறு மடங்கு அதிகமாக பூர்வகுடியினர் கொலை செய்யப்பட நேர்கிறது. வெனிசுலாவில் எஞ்சி உயிர் பிழைத்திருக்கும் பத்தாயிரம் யானோமாமிகள் பொருளாதார, சுற்றுச் சூழல், சுரண்டலுக்குப் பலியாகி முற்றாக அழிந்து போகும் நிலையில் உள்ளனர்.

● தென் ஆப்பிரிக்காவில் கறுப்பருக்கும், வெள்ளையருக்கும் இடையேயான ஏற்றத்தாழ்வில் இன வேற்றுமை பிரதிபலிக்கிறது; இது வாழும் வயது, நபர்வாரி வருமானம், மனிதவள மேம்பாட்டு நடவடிக்கையின் அளவு ஆகிய அடிப்படையில் காணும்போது இந்த இனவேறுபாடு அமெரிக்காவைவிட தென் ஆஃபிரிக்காவில் நான்கு மடங்கு அதிகமாக 1993-94-ஆம் ஆண்டு கணக்குப்படி உள்ளது.

**வன்முறையும் முறைகேடும்**

● அமெரிக்காதான் (1,00,000-க்கு 12 பேர் வீதம்) கொலைகள். (1993-இல் 1,50,000) அறிவிக்கப்பட்ட கற்பழிப்புகள், (1992-இல் 7000) துப்பாக்கிச் சூடுகளால் சிறார் சாவுகள் என்று உயர்ந்த அளவு வன்முறைச் சம்பவங்களால் உலகுக்கே தலைமை தாங்குகிறது. 30 லட்சம் அமெரிக்கக் குழந்தைகளுக்கு மேல் முறைகேடுகள், புறக்கணிப்புகளால் தீராப் பலியாகியுள்ளனர்.

● சிறார்கள்தான் வன்முறைக்கு எங்கெங்கும் பலியாகும் ஆபத்தில் இருக்கின்றனர். இரண்டு லட்சம் தெருச் சிறார்கள் வாழும் பிரேசிலில் ஒவ்வொரு நாளும் 4 பேர் கொல்லப்படுகின்றனர். 1993-94 ஆகிய ஓராண்டில் மட்டும் பிரேசிலியச் சிறார்கள் கொல்லப்படுவது 40 சதவீதம் அதிகரித்துவிட்டது.

● தாய்லாந்து, இலங்கை, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் பாலியல் சுற்றுலா மையங்களில் மொத்தம் 5 ல்ட்சம் சிறுமிகள் விபச்சாரத்தில் வேலை செய்கின்றனர்.

● பெண்களுக்கு எதிரான வன்முறை எங்கும் நிரவியிருக்கிறது. ஆனால் பெரும்பாலும் செய்தியாக வெளிவருவதில்லை; எடுத்துக்காட்டாக, இந்தியாவில் ஆண்டுக்கு 5000 முதல் 9000 வரையிலான வரதட்சிணைக் கொலைகள் நடக்கின்றன. வளரும் நாடுகளில் உள்ள, மனைவிமார்களில் மூன்றில் ஒரு பங்கினர் கணவன்மார்களால் துன்புறுத்தித் தாக்கப்படுகின்றனர். அதேசமயம் உலகம் முழுவதும் 2000-பேரில் ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள்.

**கிரிமினல் குற்றம்**

● சட்ட விரோத நடவடிக்கைகள் பெருகி



வீடற்ற இந்திய குடும்பம்; கேடுகெட்ட அரசு திட்டங்களின் விளைவு



படிப்பகம்

www.padippakam.com



கோபன்ஹேகன் மாநாட்டில் ''வறுமையை ஒழிக்காமல் அர்த்தமற்ற விவாதம் எதற்கு?'' என போராடும் பெண் பிரதிநிதிகள்

வருகின்றன. அமெரிக்காவில் மட்டும், 1992-ஆம் ஆண்டு தகவல்படி 140 லட்சம் கிரிமினல் குற்றங்கள் நடந்துள்ளன; இதனால் ஏற்பட்ட இழப்பு 12,75,000 கோடி ரூபாய்கள் 80 வளரும் நாடுகளின் கூட்டு வருமானத்தை (அந்நாடுகள் அனைத்தின் நிகர உற்பத்தியின் கூட்டுத் தொகையை)விட அதிகமாக போதைப் பொருட்களுக்காக அமெரிக்கா செலவிடுகிறது.

● உலகம் முழுவதும் பார்த்தால், பல கிரிமினல் குற்றங்களும் போதை மருந்து தொடர்புடையன. கனடாவில் 1,00,000-க்கு 225 பேரும், ஆஸ்திரேலியாவில் 1,00,000-க்கு 400 பேரும் போதை மருந்து தொடர்புடைய குற்றங்களில் சிக்கியுள்ளனர்; இதுவேகூட டென்மார்க், நார்வேயில் இரண்டு மடங்காகிவிட்டன. இதுவே 1985-90 ஆண்டுகளில், ஜப்பானில் 30 மடங்குக்கும் மேல் ஏறிவிட்டது.

● தேசிய எல்லைகளைத் தாண்டி செயல்படும் தேசங்கடந்த கிரிமினல் குற்ற அமைப்புகளின் ஆண்டு வரவு செலவு மட்டும் முப்பது லட்சம் கோடி ரூபாய் என்று மதிப்பிடப்படுகிறது.

### குடிபெயர்தல்

● பூமியில் வாழும் 115 பேருக்கு ஒருவர் வீதம் குடிபெயர்ந்தோ, அகதியாகவோ, பொருளாதாரம், அரசியல் அல்லது இராணுவக் காரணங்களால் தமது வீட்டை விட்டு ஓடும்படி நிர்பந்திக்கப்படுகிறார்.

● கடந்த மூன்று பத்தாண்டுகளில், அர்ஜெண்டைனா மக்கள் தொகைக்கு கிட்டத்தட்ட சம அளவான 350 லட்சம் பேர் தெற்கில் இருந்து வடக்கிற்கு குடிபெயர்ந்துள்ளனர்; ஒவ்வொரு ஆண்டும் மேலும் பத்து லட்சம் பேர் குடிபெயர்ந்து வருகின்றனர்.

● அரசியல் அகதிகளாகவும், தேசிய இன மோதல்களுக்குப் பலியானவர்களாகவும் எல்லை கடந்து ஓடுபவர்களின் எண்ணிக்கை 1970-களின் இறுதியில் 80 லட்சமாக இருந்து, இப்போது 2 கோடியாகிவிட்டது; மேலும் ஒரு 260 லட்சம் பேர் உள் நாட்டுக்குள்ளேயே இடம் பெயர்ந்துள்ளார்கள்.

### மோதல்

● உலக நாடுகளில் சுமார் 40 சதவீதமானவை் குறைந்தது 5 தேசிய இன மக்களைக் கொண்டிருக்கின்றன; மொத்த நாடுகளில் பாதியளவுக்காவது தேசிய இனங்களுக்கிடையிலான ஏதாவது வடிவிலான மோதலைச் சந்தித்து வருகின்றன.

> அமெரிக்காவில் 1992-ம் ஆண்டு 140 லட்சம் கிரிமினல் குற்றங்கள் நடந்து ஏற்பட்ட இழப்பு 12,75,000 கோடி ரூபாய். போதைப் பொருட்களுக்காக 80 வளரும் நாடுகளின் கூட்டு வருமானத்தைவிட அதிகமாக இங்கு செலவிடப்படுகிறது

● 1990-இல் நிகழ்ந்த 82 மோதல்களில் 79, தேசிய எல்லைகளுக்குள்ளாகவே நடந்தவை.

● 1994 ஏப்ரல் - ஜூலை ஆகிய நான்கு மாதங்களில், ருவாண்டா நாட்டு மக்கள் தொகையில் பாதியான 35 லட்சம் பேர் பழங்குடி மோதலினால் கொல்லப்பட்டார்கள் அல்லது வீடுகளை விட்டுத் துரத்தப்பட்டார்கள்.

● இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் யுத்தத்தின் காரணமாக நேரிட்ட சாவுகளில் 90 சதவீதமானோர் இராணுவத்தினர்; இப்போது 90 சதவீதத்தினர் சாதாரணக் குடிமக்கள்.

● கடந்த பத்தாண்டு போர்களினால் 15 லட்சம் குழந்தைகளுக்கு மேல் கொல்லப்பட்டனர்; இன்று 50 லட்சம் குழந்தைகள் அகதிகள் முகாம்களில் வாழுகின்றனர். 120 லட்சம் பேர் தமது வீடு வாசல், குடும்பம் அல்லது இரண்டையும் இழந்தனர்.

● பரம ஏழைகளான 200 கோடிப் பேர் சம்பாதிக்கும் மொத்த வருவாயின் அளவுக்கு வளர்ந்த நாடுகள் தமது இராணுவ அதிகாரத்துக்காக செலவிடுகின்றனர்.

● இராணுவத் திட்டங்களுக்காக ஆண்டுக்கு 2,40,000 கோடி ரூபாய் - அதாவது உலக மக்களில் பாதிப்பேருடைய வருவாய்க்குச் சமமாக - செலவிடப்படும் உலகில், 100 கோடி மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதி கிடையாது; வயது வந்தோரில் நான்கு பேரில் ஒருவருக்கு எழுதப்படிக்கத் தெரியாது; உலகின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் ஒவ்வொரு நாளும் பட்டினி கிடக்கின்றனர்.

படிப்பகம்

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015.

www.padippakam.com






# இதுதான் இன்றைய இந்தியா

எட்டப்பன் தேச பக்தன் வேடம் போட்டால் எப்பிடியிருக்கும்? அப்படியானதொரு கூத்துதான் அருகிலுள்ள இந்தப்படம். பா.ஜ.க.-வின் இராசஸ்தான் மாநில முதல்வர் ஷெகாவத், காங்கிரசு பெருச்சாளிகளான சரத்பவார், பியாந்த் சிங் - இவர்கள் அனைவரும் சுதந்திர போராட்ட தியாகிகளை நினைவு கூறும் தியாகிகள் தின விழா இது. சுதந்திர போராட்டத்தின் பொழுது, பகத் சிங்கைத் தூக்கிலேற்ற துணை போனார்கள், காங்கிரசு கயவாளிகள்; 'சுதந்திரம்' கிடைத்த பின்னோ, இருந்த அற்ப சொற்ப உடமைகளையும் மொத்தமாகச் சுருட்டி, ''காட்'' ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் ஏகாதிபத்தியங்களின் காலடிகளில் சமர்ப்பித்து விட்டார்கள். இந்து மதவெறியர்களோ காங்கிரசைவிடக் கேவலமானவர்கள். தங்கள் கட்சியினைச் சேர்ந்த ஒரு உறுப்பினரைக் கூட, சுதந்திர போராட்ட தியாகி எனக் கூறிக்கொள்ள அருகதையற்றது அக்கட்சி. ''காட்''டை எதிர்த்து சுதேசி இயக்கம் எனக் கூறிக் கொண்டே, ''டயோட்டா'' என்ஜின் பொருத்திய கார்களில் பவனி வருகிறார்கள், பா.ஜ.க.-வின் தலைவர்கள். தாகம் தீர்க்க கோகோ - கோலாவை நாடுகிறார்கள். ஆனாலும் ஒவ்வொரு வருடமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு - தேசபக்த வேடம் புனைந்து நாடகமாடத் தவறுவதில்லை, இப்பாசிசக் கோமாளிகள்.

இதோ இக்கலைஞர்கள் பம்பாயின் முற்போக்கு ஜனநாயக மாணவர் சங்கம் மற்றும் ''நிஷாந்த் நாட்டிய மஞ்ச்'' எனும் கம்யூனிச புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்தவர்கள். பகத் சிங்கும் அவனது தோழர்களும் தூக்கிலிடப்பட்ட தினத்தை நினைவு கூர்ந்து, ''ஆயுதந்தாங்கிய புரட்சியின் மூலம் மட்டுமே நாட்டை ஏகாதிபத்திய அடிமைத் தனத்தில் இருந்து விடுதலை செய்யமுடியும்'' என்பதை மக்கள் மத்தியில் அக்கலைஞர்கள் எடுத்துச் சொல்லும் தெரு நாடகமிது; ஏகாதிபத்திய கைக்கூலிகளுக்கு எதிரான போர்ப் பிரகடனமிது. இந்த உண்மையை எடுத்துச் சொல்வதால்தான், அவர்களை நாளும் நர வேட்டையாடி வருகிறார்கள், ஆட்சியாளர்கள். ஆனாலும் அடக்குமுறையைக் கண்டஞ்சி ஒடுங்கிவிடுவதில்லை, கம்யூனிசப் புரட்சியாளர்கள். முன்னைவிட இன்னும் வீறுகொண்டு எழுந்து மக்களை அணிதிரட்டுகிறார்கள்.

நாட்டை மறு அடகு வைத்துவிட்டு, நாளும் ஒரு வேடமணிந்து ஏய்த்துவரும் ஓட்டுக்கட்சிகளை இனியும் நம்பப் போகிறோமா? அல்லது பகத்சிங் வழியில் ஆயுதந் தாங்கி நாட்டை விடுதலை செய்யப் போராடப் போகிறோமா?



படிப்பகம்